# சிங்கள அரங்கமும் தமிழ் அரங்கின் பங்களிப்பும்

கலாநிதி.
காரை செ. சுந்தரம்பிள்ளை

இரு வேறுபட்ட சமூகங்கள் ஒரு நாட்டில் அருகருகாக வாழும் பொழுது பண்பு பண்பாடு, கலை கலாசாரம், என்பன ஒன்றுடனொன்று கலத்தல் இயல்பே. உலக நாடுகள் அனைத்திலும் இவ்வுண்மையை யாம் காண்கின்றோம். இது இலங்கைக்கும் பொருந்துவதாகும்.

மிகத்தொன்மையான காலத்திலிருந்தே சிங்கள மக்களும் தமிழ் மக்களும் இலங்கையில் வாழ்ந்து வருகின்றார்கள். விஜயனுடைய வருகையுடன்தான் சிங்கள இனத்தின் வரலாறு இலங்கையில் ஆரம்பிக்கின்றதென்பர் வரலாற்றாசிரியர். ஆனால் விஜயனுடைய வரலாற்றை ஒரு ஐதீகக் கதையென்றும், இக் கதை ஆரியர்கள் இலங்கைக்கு வந்ததைக் கூற எழுந்த கட்டுக் கதையென்றும் வரலாற்றாசிரியர் ஜீ. சீ. மென்டீஸ் கருதுகிறார்.[1]

விஜயனுடைய வருகைக்கு முன்னர் இலங்கையில் வாழ்ந்தவர்கள் இயக்கர், நாகர், வேடர் ஆகிய சாதியினராவர். இவர்களுள் நாகர் திராவிட இனத்தின் முன்னோர்கள் இன்றைய தமிழர்களின் மூதாதையர்கள் எனக் கொள்ளப்பட வேண்டியவர்கள்[2]. இவர்கள் நாக வழிபாட்டினர். சிந்து வெளியில் வாழ்ந்த மக்களும் நாக வழிபாட்டினர். இம் மக்கள் அங்கிருந்து கடல்வழியாக இலங்கைக்கு வந்து குடியேறியிருக்க வேண்டும், அப்படியானால் ஆரியர்களுடைய வருகைக்கு முன்னரே திராவிடக் குடிகள் இலங்கையில் வாழ்ந்திருக்கிறார்கள் என்பர் ஈ. எல் தம்பிமுத்து[3] ஜே. எமர்ஸன் ரெனன்ற் என்பவர் நாகர்கள் இலங்கையின் வடபகுதியிலும், மேற்குக் கரையோரங்களிலும் வாழ்ந்த இனத்தவர்கள் என்பர்.

இற்றைக்கு இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இந்நாட்டில் அருகருகாக தமிழ் மக்களும் சிங்கள மக்களும் வாழ்ந்து வருகிறார்கள். இடைக்கிடை தென்னகத்திலிருந்து படையெடுத்து வந்த

தமிழர்களும் குடிபெயர்ந்து வந்த தமிழர்களும் மேலும் இலங்கையில் சிற்சில பிரதேசங்களிற் கலந்து கொண்டனர்.

இன்று வடக்குக் கிழக்குப் பிரதேசத்திலும், மலையகத்திலும் மட்டும் தமிழ் மக்கள் செறிந்து வாழ்கின்றனர். ஆனால் கிறிஸ்து சகாப்தத்துக்கு முன்பே கதிர்காமம் கல்யாணி என்றழைக்கப்பட்ட களனி, நீர்கொழும்பு, சிலாபம் ஆகிய பிரதேசங்களிலும் தமிழ் மக்கள் குவிந்து வாழ்ந்தனர். எனவேதான் தமிழர் பண்பு, பண்பாடு என்பன பெரிதும் சிங்கள மக்களுடைய பண்பு, பண்பாடு என்பனவற்றுடன் இலகுவில் கலக்கவும், சிங்கள மக்களுடைய பண்பு பண்பாடென்பனவற்றுட் சில தமிழ் மக்களிடையே கலக்கவும் ஏதுவாயின குறிப்பாகச் சிங்கள அரங்க வரலாற்றில் இதனைப் பெரிதும் அவதானிக்க முடிகிறது.

பண்டைய மக்களுடைய சமயக்கரணங்களிலேதான் நாடகங்களின் ஊற்றுக்கால்கள் உள்ளன என்பர் நாடக ஆய்வாளர்கள். இது தமிழ் அரங்குக்கும் சிங்கள அரங்குக்கும் பொருந்தும், பொதுவாகச் சிங்கள மக்கள் பேயோட்டுவதற்காகச் செய்யும் சமயக் கரணங்கள் அனைத்தும் நாடகத்

ஆரியர்களுடைய வருகைக்கு முன்னரே திராவிடக் குடிகள் இலங்கையில் வந்திருக்கிறார்கள்.

தன்மை வாய்ந்தவை. இவற்றுட் பெரும்பாலானவை தமிழ் மக்களிடமிருந்து பெறப்பட்டவையாகும். குறிப்பாக நவக்கிரகங்களால் ஏற்படும் நோய்நொடிகளைத் தீர்க்க ஆடப்படும் 'பலி' எனும் சமயச் சடங்கு சார்ந்த நடனம் பிரமாணக் குருமார்களூடாகச் சிங்கள மக்களைச் சென்றடைந்த ஒன்றாகும்.[5]

இன்றும் தொற்று நோய்கள் ஏற்படும் போதும் பயிர்வளம், கடல் வளம் என்பன குன்றும் போதும் கூத்துக்களை ஆடும் மரபு தமிழ் மக்களிடையே உண்டு. இதனைச் சிங்கள மக்கள் மத்தியிலும் காணக்கூடியதாகவுள்ளது. காத்தவராயன் கூத்து கோவலன் கூத்து என்பன இவ்வாறு தமிழ் மக்களால் ஆடப்படும் கூத்துக்களாகும்.

தமிழ் மக்களிடையே உள்ள கண்ணகி வழிபாடு, சிங்கள மக்களிடையே பத்தினி வழிபாடாக வாழ்கிறது. அதேபோல ஏழு கன்னியர் வழிபாடு சத்பத்தினி வழிபாடாகச் சிங்கள மக்களிடையேயுள்ளது. பத்தினி வழிபாட்டுடன் தொடர்புடைய ஆடல் பாடல்கள் சத்பத்தினி வழிபாடு கிரியம்மாமார் வழிபாடு, ரத்னாவளி வழிபாடு, அமராவதி வழிபாடு என்பவற்றுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளன. 'கண்ணகி வழக்குரை' கோவலன் கதை என்பன உடுக்கடி கதைககளாக ஈழத்தமிழர்களிடையே வாழ்வது போல சிங்கள மக்களிடையேயும் 'சத்பத்தினி கவி' என்பன பாடப்பட்டும் ஆடப்பட்டும் வருகின்றன.[6] சிங்கள அரங்க வளர்ச்சிக்கு கண்ணகி வரலாறும் அதனுடன் தொடர்புடைய ஆடல்பாடல்களும் பெரிதும் துணை செய்துள்ளன என்பதைக் கூர்ந்து நோக்கும் போது தெரிய வருகிறது.

சிங்கள மக்களிடையே காணப்படும் கிராமியக் கலை வடிவங்களுள் ஒன்றாக 'சொக்கறி' என்னும் கூத்து விளங்குகிறது. மௌனகுரு தமது கட்டுரை ஒன்றில் இந் நாடகத்துக்கும் மட்டக்களப்பில் ஆடப்படும் மகுடிக் கூத்துக்கும் உள்ள ஒற்றுமையைக் குறிப்பிட்டுள்ளார். கருப்பொருள் மேடையமைப்பு, அளிக்கை முறை, பார்ப்போருக்கும் நடிகர்களுக்குமிடையில் உள்ள ஊடாட்டம் என்பனவற்றிடையே காணப்படும் ஒற்றுமையை இவர் காட்ட முனைந்துள்ளார். இதேபோல சொக்கறியில் காணப்படும் ஆடல் அமைப்பில் சிலவும், இசையமைப்பிற் சிலவும் இலங்கையில் வடபகுதி மக்களால் ஆடப்படும் காத்தவராயன் கூத்துடன் ஒத்திருக்கக் காணலாம். ஏனைய சிங்களக் கூத்து வடிவங்களுடன் ஒப்பிடும் பொழுது சொக்கறி தமிழ் அரங்கிற்கே பெரும்பாலும் கடன்பட்டிருக்கிறது என்பது தெளிவாகிறது.[7] இக் கூத்தில் வரும் சில பாத்திரங்கள் தமிழ்ப்பெயர்களைக்

கொண்டிருப்பதும் இடைக்கிடை சில தமிழ்ச் சொற்களையும் பேசுவதும் இக் கருத்தை மேலும் வலியுறுத்தக் காணலாம்.

சிங்கள அரங்குக்கு தமிழ் அரங்கு பெரிதும் பங்களிப்புச் செய்திருக்கிறது என்பதைப் பேராசிரியர்களாகிய ஈ. ஆர். சரச்சந்திரா, எம். எச். குணதிலகா, ஏ. ஜே. குணவர்த்தனா ஆகியோரும் உறுதி செய்துள்ளனர்.

பேராசிரியர் ஈ. ஆர். சரச்சந்திரா தாம் எழுதிய கட்டுரையொன்றில் செந்நெறி அரங்கை விட சிங்கள நாட்டார் அரங்குகளே தமிழ் அரங்குக்குப் பெரிதும் கடன் பட்டுள்ளன என்பர்[8]. ஈழத்துத் தமிழ் நாட்டார் கூத்துக்கும், தமிழகத் தெருக் கூத்துக்கும், சிங்கள 'நாடகம' எனப்படும் நாட்டார் கூத்துக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை இவர் நுட்பமாக ஆராய்ந்துள்ளார்.

வட இலங்கையிலாடப்பட்ட கத்தோலிக்க நாட்டார் கூத்துக்கள் நீர்கொழும்பு சிலாபம் ஆகிய பிரதேசங்களுக்குக் கத்தோலிக்க குருமார்களால் எடுத்துச் செல்லப்பட்டன இப் பிரதேசங்களில் வாழ்ந்த மக்கள் சிங்கள மொழியையும் தமிழ் மொழியையும் பேசுமாற்றலும் விளங்குமாற்றலுமுடையவர்களாயிருந்தனர். அதனால் தமிழ் நாட்டார் கூத்துக்களை ஆர்வத்துடன் பார்த்து மகிழ்ந்து வந்தனர்.

முதன்முதலில் 'எஸ்தாக்கியார்' எனும் கத்தோலிக்க நாட்டார் கூத்தை பிலிப்பு சிஞ்ஞோ எனும் சிங்களப் புலவர் 'ஸ்தாக்கி நாடகம்' எனும் பெயரில் மொழிபெயர்த்து மேடையேற்றினார். இவர் மேலும், 'சகலப் பொல' 'மாத்தளன்' 'செனகப்பு' 'சிம்ஹவல்லி' ஹெலேனா' 'விஷவகர்மா' 'வர்த்தகம்' 'சன்னிகுலா' 'ராஜா துங்கட்டுவ' 'சுலாம்பாவதி' 'ஹானுக்கொட்டுவ' ஆகிய நாடகங்களையும் தமிழிலிருந்து சிங்களத்துக்கு மொழி பெயர்த்தார் என்று சொல்லப்படுகிறது.[9]

பிலிப்பு சிஞ்ஞோவுக்கு முன்னரே, தமிழிலிருந்து நாட்டார் கூத்துக்கள் சிங்கள மொழிக்கு எடுத்துச் செல்லப்பட்டிருத்தல் வேண்டும் என்பர் பேராசிரியர் எம். எச். குணதிலகா. இதனை இவர் தகுந்த ஆதாரங்களுடன் நிரூபித்துள்ளார்.[10]

19 ஆம் நூற்றாண்டு, சிங்கள நாடகம வரலாற்றில் பொற் காலம் எனலாம். இக் காலப் பகுதியில்தான் ஏராளமான 'நாடகம' நூல்கள் எழுந்தன. பிலிப்பு சிஞ்ஞோவின் வாரிசுகளாகப் பல நடிகர்கள் உருவாகினர் அவர்களுள் பேலிஸ் அப்புகாமி கல்கிசை எந்திரிக் அப்புகாமி ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள். இவர்கள் தவிர கிறிஸ்ரியன் பேரேரா, ஸ்ரீவன் சில்வா ஆகியோரும் 'நாடகம்' நூல்களை எழுதினார் தமிழ் மொழியிலிருந்து 'பலசந்த நாடகம்' செலஸ்ரீனா நாடகம்' 'ஞானசவுந்தரி நாடகம்' 'கதரினா நாடகம்' 'போஷியா நாடகம்' 'அரிச்சந்திரா நாடகம்' என்பவற்றை மொழி பெயர்த்து எழுதினார்.

> 19 ஆம் நூற்றாண்டு, சிஙகள நாடகம வரலாற்றில் பொற்காலம் எனவும் இக் காலப்பகுதியில்தான் ஏராளமான நாடக நூல்கள் எழுந்தன.

அளிக்கை முறையிலும், அரங்க அமைப்பிலும் ஒப்பனையிலும் கூட நாட்டுக் கூத்துக்களுக்கும் 'நாடகம' வுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. வட்டக்களரியிலேயே இக் கூத்துக்கள் ஆடப்பட்டன. எவ்வித திரைகளுமின்றி வட்டமான மேடையமைத்து ஆடும் மரபு இன்றும் மட்டக்களப்பிலும், யாழ்ப்பாணத்திலும் (வட்டுக்கோட்டை தீவுப்பகுதி) காணப்படுகிறது. சிங்கள மக்கள் மத்தியிலும் நாடகம இவ்வாறு ஆடப்பட்டது. இப்பொழுது திரைகளமைத்து ஆடத் தொடங்கியுள்ளனர்.

தமிழ்க் கூத்துக்களில் அண்ணாவியார் பெறும் முக்கியத்துவத்தை நாடகம வில் 'பொத்தே குரு' பெறுகின்றார். தமிழ் கூத்துக்களில் மத்தள அண்ணாவியார் பெறும் இடத்தினை நாடகம வில் 'பேரகாரயோ – Berakarayo (மத்தளம் வாசிப்ப

வர்) பெறுகின்றார். ஏடுவழங்குதல், பயிற்சி யளித்தல், களரியேற்றுதல் ஆகியனவற்றி லும் மிகுந்த ஒற்றுமையைக் காண முடி கிறது.

அண்ணாவியார் பாடும் கடவுள் வாழ்த் துடன் தமிழ் கூத்து ஆரம்பமாவது போல 'நாடகம' வும் பொத்தேகுரு பாடும் 'மூலா ரம் பய'வுடன் ஆரம்பமாகும். தோடயத் தைத் தொடர்ந்து கோமாளி வருதல், கட்டியகாரன் வருதல் என்பனவும் இரு கூத்துக்களுக்குமிடையே உள்ள ஒற்றுமை களாகும். நாடகமவில் வரும் செல்லப் பிள்ளை, செல்லன்லமா ஆகிய பாத்திரங் கள் இத்தகையனவேயாகும்.

வட இலங்கை நாட்டார் கூத்துக்களில் பாடப்படும் பாடல் வடிவங்களாகிய வெண்பா, விருத்தம், ஆசிரியம், இன்னிசை கலிபா, கலித்துறை, கலி, கொச்சகம், பரணி, கல்வெட்டு, கந்தார்த்தம் ஆகியன வும் சிங்கள நாடகம விலும் பாடப்படுகின் றன. தமிழ்க் கூத்துக்களில் கையாளப்படும் 'தரு' 'தர்க்கம்' 'வசனம்' என்பனவும் நாடகம வில் வழக்கிலுண்டு[11] தமிழ்க் கூத்தர்களால் ஆடப்படும் ஆடற் கோலங் களும் நாடகமவில் அப்படியே கையாளப் படுகின்றன.

தற்கால சிங்கள அரங்க வளர்ச்சிக்கும் தமிழ் அரங்கின் பங்களிப்பு முக்கியமானது. பேராசிரியர் ஈ. ஆர் சரச்சந்திராவின் தேசிய நாடக வடிவத் தேடலின் போது உருவானவையே 'மனமே' 'சிங்கபாகு, ஆகிய ஒப்பற்ற இரு நாடகங்களாகும். இந் நாடகங்களில் பேராசிரியர் கையாண்ட இசைவடிவங்களும், ஆடல் வடிவங்களும், 'நாடகம' விலிருந்து பெற்றனவாகும். இதனை பேராசிரியரே உறுதி செய்கின் றார்.[12] சிங்கள நவீன நாடக' வடிவத்தின் தோற்வாய்க்கு முக்கியமாக அமைவது 'நாடகம' ஆகும். இவ்வடிவம் தமிழ் நாட்டு கூத்திலிருந்து பெறப்பட்டதென்பது யாவ ரும் அறிந்ததே.

இவைதவிர சிங்களக் கிராமிய மக்களால் பாடப்படும் 'மீனவர் பாட்டு' 'கப்பற்பாட்டு 'வண்டிற்பாட்டு' என்பனவும் சிங்களச் செந்நெறி இசையாக மலர்ந்துள்ள 'வண் ணம' (வண்ணம்) விரஹ' (காதலிசை – விரகதாபம் சம்பந்தமானது Viraha) பஜ னம் (பஜனை) 'வர்ணணா' (வர்ணனை) என்பனவும் தமிழ் இசையிலிருந்து சிங்கள இசைக்குச் சென்றனவாகும்.

இதுவரை ஆராய்ந்தனவற்றிலிருந்து தமிழ் அரங்கக் கலை எவ்வளவு தூரம் சிங்கள அரங்கக்கலை வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்தியிருக்கின்றது என்பது புலப்படு கிறது. அரங்கக் கலை சிங்கள தமிழ் மக்க ளின் ஒற்றுமைக்குப் பாலமாகவும் ஒரு காலத்தில் விளங்கியிருக்கின்றது என்பதும் தெரிய வருகிறது.

அடிக்குறிப்பு


1. Mendis G. C. Early History of Ceylon Pg 8, Calcutta 1947
2. Bouguet A. C. Hinduism Pg 18, London 1945
3. Thambimuttu E. L. Dravida Pg 7, Colombo
4. Emerson Tennant Ceylon Vol. 1 Pg 330, London
5. சுந்தரம்பிள்ளை காரை செ. சிங்களப் பாரம்பரிய அரங்கம் பக். 30 கொழும்பு 1997
6. Raghavan M. D. Sinhala Natum Pg 130 - 131, Colombo 1967
7. சுந்தரம்பிள்ளை காரை. செ. மே. நூ பக் 84
8. Sarachchandra E. R. தமிழ் சாகித்திய விழா மலர் 1993 பக் 101, கொழும்பு.
9. Sarachchandra E. R. Folk Drama of Ceylon (1956) Pg 95, Colombo
10. Goonatileka M H. Nadagama pg 40 – 45, New Delhi 1984
11. சுந்தரம்பிள்ளை காரை. செ. மே. நூ பக் 102
12. Sarachchandra E. R தமிழ் சாகித்திய விழா மலர் 1993 பக் 102 – 103
13. Sarachchandra E. R Folk Drama of Ceylon Pg 11 – 12

# பல்கலை வித்தகர்

# காரை செ.சுந்தரம்பிள்ளை

நயினை கி.கிருபானந்தா

எதையும் கூர்ந்து கவனிக்கும் கண்கள். வார்த்தையின் பெறுமதியை உணர்ந்து ஒவ்வொன்றாக வெளிப்படுத்தும் உரையாடல் இத்தனை திருக்கோலத்துடன் எம்மத்தியில் வாழ்ந்துவரும் ஓர் அறிஞன், ஒரு சிந்தனாவதி மாபெரும் கலைஞன் கலாநிதி காரை செ.சுந்தரம்பிள்ளை என்பதை தமிழ் கூறும் நல்லுலகம் நன்கறியும்.

நவீன தமிழிலக்கியத்தில் காரையின் பேனா தடம் பதிக்காத துறை எதுவுமேயில்லை எனலாம். காரை என்ன எழுதினார் எனக் கணக்கிடுவதிலும் பார்க்க எதனை எழுதவில்லை எனக் கணக்கிடுவது இலகுவாக இருக்கும். நாடக ஆசிரியராக-நடிகராக-நடுவராக-பேச்சாளராக-ஆய்வாளராக கவிஞராக-கட்டுரையாளராக-பாடநூல் எழுத்தாளராகப் பலதுறைகளிலும் அகலமாயும் ஆழமாயும் கால்களை ஊன்றியுள்ளார். தரமான நாடகங்களை மேடையேற்றியதுமன்றித் தானே பிரதான நடிகராக நடித்தும் நாடகத் துறைக்கு மெருகூட்டியவர்.

நாடகங்களை எழுதி நெறிப்படுத்தி தயாரித்து அவற்றில் நடிக்கும் கலைஞர்கள் மிகக் குறைவு. இக்குறை போக்கிய காரை தன்னுடைய ஆங்கிலப் புலமையின் துணை கொண்டு நாடகமேடை உத்திகளைக் கற்றறிந்து ஈழத்து தமிழ் நாடகங்களை வளர்ந்துவிட்டமேலைத்தேசமேடை நாடக உயர் நிலைக்கு உயர்த்த வேண்டும் என்ற உயர்ந்த எண்ணம் உடையவர்.

இவர் முதல் ஆடிய நாட்டுக் கூத்து இரணிய சம்ஹாரம். (பாத்திரம் பிரகலாதன்) முதலில் நடித்த சமூக நாடகம் பராசக்தி-(பாத்திரம் கல்யாணி) மேடையேற்றிய முக்கிய நாடகங்கள் சமூகநாடகங்கள் தரகர் தம்பர்-தம்பிபடிக்கிறான்-வாழ்வும் தாழ்வும்-சினிமா மோகம்-சித்திரமே சித்திரமே-இதிகாசபுராண நாடகங்கள் பக்க நந்தனார், கர்ணன், சகுந்தலை, தமயந்தி, வில்லொடிந்த விதுரன், சிற்பியின் காதல், ஆட்ட நாட்டுக் கூத்து நாடகங்கள், பாஞ்சாலி சபதம்-மூவிராசாக்கள்-மூத்தர் மாணிக்கமா? காமன் கூத்து சிறுவர் நாடகங்கள் மூத்தோர் சொல்வார்த்தை அமுதம். (1998) பாவம் நரியார் (1998).

நாடறிந்த நல்ல கவிஞரான காரையின் பிரசுரமான முதல் கவிதை புகைவண்டி வெளிவந்த பத்திரிகை-பூஞ்சோலை-காலப் போக்கில் ஈழத்து பத்திரிகைகள் அனைத்திலும கவிதைகள் வெளிவந்தன. இவர் வெளியிட்ட கவிதை நூல்கள் தேனாறு (1968) சங்கிலியம் (1970) தவம் (1971) உறவும் துறவும் (1985) பாதை மாறிய போது (1968) காவேரி (1993) போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இவரின் ஆய்வுநூல்களை "ஈழத்து இசை நாடக வரலாறு (1990)" இந்து நாகரிகத்திற் கலை 1994), "நடிகமணி வி.வி.வைரமுத்துவின் வாழ்வும் அரங்கும் (1996)" சிங்களப் பாரம்பரிய அரங்கம் (1997)"

பதிப்பித் நூல்கள் நாடகதீபம் (1989) கல்வி உளவியல் (1975)

இலங்கை அரசின் சாகித்திய மண்டலப் பரிசுபெற்ற நூல்கள் தேனாறு (1968) சங்கிலியம் (1970) ஈழத்து இசைநாடக வரலாறு (1990) நடிகமணி வி.வி.வைரமுத்துவின் வாழ்வும் அரங்கும் (1996) இந்து நாகரிகத் திற்கலை (1994).

அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற போட்டிகளில் தங்கப் பதக்கம் முதற்பரிசாக பெற்றமை பதுளை பாரதி கல்லூரி நடத்திய கவிதைப் போட்டி (1968), யாழ்.மாநரசபை நடத்திய போட்டி (1969) யாழ்.மாநகரசபைக் குரிய மன்றக்கீதம் எழுதும் போட்டியில் முதற்பரிசும் விருதும் (1982) ஈழநாடு தின சரிப்பத்திரிகை நடத்திய அகில இலங்கை காவியப்போட்டி 1970 இல் சங்கிலியம் முதற் பரிசு பெற்றது.

இவர் கலாநிதிப்பட்டத்திற்குச் சமர்ப்பித்த ஆய்வு மிகச் சிறந்த ஆய்வு ஏடு எனப்பரீட்சகர்களால் பாராட்டப்பட்டது. இதற்காக யாழ். பல்கலைக்கழகம் தம்பிமுத்து கனகசுந்தரம்பிள்ளை நினைவுப் பரிசை வழங்கியது.

காரையின் பேச்சுக்கலைப் பெருமைகளும் கருத்தில் கொள்ளத்தக்கன. பேச்சை ஆளுதல் என்பது சிரமமான காரியம். நாட்டை ஆளுவதாக நாவை ஆளுவதா இலகுவானது என்ற கேள்வி எழுந்தால் நாட்டை ஆளுவது சுலபமாகத் தெரியும். நாடாளப்பக்கத்துணைகள் பல இருக்கும். நாவை ஆளுவதற்கு எவருடைய துணையும் கிடைக்காது. எல்லாவற்றையும் தானே கவனித்து நாவாட்சி செலுத்த வேண்டும்.

காரையின் பேச்சு வண்மையை ஆய்வு செய்தால் முதலாவது இவர் ஒரு சமய இலக்கிய கலாரசனைப் பேச்சாளர், இரண்டாவது ஒருங்கமைந்த சமூக மேம்பாட்டுச் சிந்தனைப் பேச்சாளர், மூன்றாவது பட்டிமண்டப வழக்காடு மன்றப் பேச்சாளர் எனக் காணலாம். அறிவு பூர்வமாகவும் நியாயபூர்வமாகவும் சரியான தீர்வு மார்க்கங்களைக்காட்டுவார். எந்த விடயத்திலும் இவருடைய பன்னூல் பயிற்சியை அறியமுடியும். இத்தனைக்கும் அவருடைய ஆழ்ந்தகன்ற கல்வியறிவே காரணமாகும்.

சிறந்த பண்பாளனும் இயற்கையிலேயே சாந்த குணமுடையவரும் எல்லோருடனும் இனிமையாகப் பேசிப்பழகும் சுபாவம் உடையவரும் அமைதியான எளிமையான தோற்றங் கொண்டவராகவும் காட்சிக்கு எளியவராகவும் கருத்துக்கினியவராகவும் இன்றும் உடல் உள நலத்தோடு உறவாடிக்கொண்டிருக்கும் காரை பன்முக ஆளுமை கொண்டவர்.

இவ்வளவும் கூறியபிறகும் ஈழத்துத் தமிழ் இலக்கிய உலகிற்கு காரையின் பங்கு எப்படிப்பட்டது? தமிழ் அறிஞர் திருக்கூட்டத்திலே அவர் எந்த வரிசையில் எந்த இடத்தில் நிற்கின்றார், என்ற வினா எழவே செய்கிறது.

"வீழ்நாள்படா அமைநன் காற்றின் அஃ்
தொருவன்
வாழ்நாள் வழியடைக்கும் கல்"
என்றார் வள்ளுவர்.

அவரின் பொன் மொழிக்கேற்பத் தமது வாழ்நாள்களை வீழ் நாள்களாக்காது முதுமையிலும் அயராது பணியாற்றிவரும் காரையின் வாழ்நாள் முடிவின்றி நீண்டு கொண்டேயிருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

# பன்முக ஆற்றலும் பார்வையும் பெற்ற சிந்தனையாளர் காரை.சுந்தரம்பிள்ளை

பன்முகப் பார்வையும் பன்முக ஆற்றலும் பெற்ற சிந்தனையாளர் கலாநிதி காரை செ.சுந்தரம்பிள்ளை அவர்கள் 1938 ஆம் ஆண்டு காரைநகர், களபூமியில் கலை ஈடுபாடும் கொட்டகைக் கூத்துப் பயிற்சியும் அறிவும்மிக்க குடும்பத்தில் காரை.சுந்தரம்பிள்ளை பிறந்தார்.

ஆரம்பக் கல்வியை ஊர்காவற்றுறை சென்.அன்ரனீஸ் கல்லூரியில் பெற்றார்.

கல்விப் பொதுத்தராதரப் பரீட்சையில் சித்தியடைந்த பின்னர் உயர்தரதராதரப் பரீட்சைக்கான கல்வியை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் பெற்றார்.

இலண்டன் பல்கலைக்கழக இடைநிலைப் பட்டப் பரீட்சைக்கு யாழ்ப்பாணக் கல்லூரியில் பயிற்சி பெற்றுத் தேறினார்.

இலண்டன் பல்கலைக்கழக கலைமாணிப் பரீட்சைக்கு அக்குவைனஸ் பல்கலைக் கழகக் கல்லூரியில் கல்வி கற்று முதற்றடவையிலேயே சித்தி அடைந்தார்.

அக்குவைனஸ் பல்கலைக்கழக கல்லூரி மாணவனாக இருக்கும் காலத்திலேயே காரை இலக்கியப் பணியிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

லண்டன் பல்கலைக்கழக கலையியல் பட்டதாரியான காரை. இலங்கையின் மத்திய பகுதியில் பாடசாலை ஆசிரியராகப் பணியாற்றத் தொடங்கினார். சில ஆண்டுகளின் பின்னர் அவரது கல்விப் பணி யாழ்.இந்துக் கல்லூரிக்குக் கிட்டியது.

யாழ்.இந்து ஆசிரியராகப் பணியாற்றும் காலம் அவரது பணி பன்முகத் தன்னை பெற்றது.

ஆசிரியர், கவிஞர், மேடைப்பேச்சாளர் என்பதுடன் கல்வியியல் எழுத்தாளர் என்ற நிலையையும் எய்தினார். 1977 ஆம் ஆண்டின் பின்னர் சுமார் நாலு ஆண்டுகள் காரை செ.சு.காரைநகர் இந்துக்கல்லூரி அதிபராகப் பணியாற்றினார்.

பின்னர் பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளராக நியமனம் பெற்று- கல்லூரிக் கல்வி வைப்பு முறையில் இருந்து விடுபட்ட காரை- சிறிது காலத்தில் தலவாக்கலை ஆசிரிய பயிற்சிக் கல்லூரி அதிபராக நியமனம் பெற்றார்.

தலவாக்கலையில் இருந்து கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு இடமாற்றம் பெற்று வந்த இவர் சில காலத்தில் அப்பயிற்சிக் கல்லூரி அதிபராக நியமனம் பெற்று பின்னர் ஓய்வுபெற்றார்.

கல்வியியலிலும், தத்துவ இயலிலும் இரு முதுகலை மாணிப் பட்டங்களைக் காரை. பெற்றிருந்தார். நிறைவாக வட இலங்கையின் பாரம்பரிய அரங்கு என்ற பொருளில் அமைந்த அவரது ஆய்வு அவருக்குக் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக் கொடுத்தது.

நாடகத்துறை ஈடுபாடு மிக்க குடும்பத்தில் பிறந்த காரை சிறுவயது முதலே நாடக ஈடுபாடு மிக்கவராகத் திகழ்ந்தார். காலில் சலங்கை கட்டி தென்மோடி நாடகங்களை அவரே நடித்து அரங்கேற்றினார்.

நடிகனாக, இயக்குநராக, நாடக எழுத்தாளராக எல்லாம் நாடகத்துறையில் அவர் பிரகாசித்தார். இரணிய சம்ஹாரம் என்ற ஆட்டக் கூத்தில் பிரகலாதன் வேடம் ஏற்று அவர் சலங்கை கட்டி அன்று ஆடியது பற்றி பல காலம் அத்துறை சார்ந்தோர் பிரஸ்தாபித்தமை குறிப்பிடத்தக்கது. கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் பணியாற்றிய காலத்தில் பாஞ்சாலி சபதம் ஆட்டக் கூத்தை அவர் நடித்து இயக்கி அரங்கேற்றியமை குறிப்பிடத்தக்கதாகும்.

## அரன்

சுமார் இருபதுக்கும் மேற்பட்ட சமூக, புராண, வரலாற்று நாடகங்களை எழுதியும் இயக்கியும் சிலவற்றில் பாத்திரம் ஏற்றும் அவர் அரங்கேறியுள்ளார்.

கவிஞர் என்ற நிலையில் சுமார் ஆறு நூல்களை வெளியிட்டுள்ளார். காவியங்கள் தனிப்பாடல்கள் என்ற வகையில் நிறைய எழுதிய பொழுதும் அவை நூல் வடிவம் பெறவில்லை.

நடிகமணி வி.வி.வைரமுத்துவின் வாழ்வும் அரங்கும், ஈழத்து இசைநாடக வரலாறு, இந்துநாகரிகத்திற் கலை, சிங்களப் பாரம்பரிய அரங்கம் ஆகியவை அவரது ஆய்வுப் பணியின் அறுவடையாகும்.

இவரது ஐந்து நூல்கள் இலங்கை சாகித்திய மண்டலப் பரிசு



பெற்றன.

கவியரங்கு, பட்டி மண்டபம் ஆகிய இரு துறைகளையும் யாழ்ப்பாணத்தில் ஜனரஞ்சகப்படுத்திய பெருமை காரை அவர்களையே சாரும். அவர்கூட இவ்வடிவங்களில் பங்கு கொண்ட பலர் இன்று அமரராகிவிட்டனர்.

இலங்கைத் தமிழரசுக்கட்சி அரசியலில் நிறைந்த ஈடுபாடுகொண்ட கலாநிதி காரை அவர்களை கூட்டணி வேட்பாளராக கோப்பாய்த் தொகுதியில் 1977 ஆம் ஆண்டு நிறுத்துவதற்குப் பெரும் முயற்சிகள் எடுக்கப்பட்டன. அந்தக் கோரிக்கையை ஏற்க காரை. மறுத்து விட்டார்.

சிறந்த சிந்தனையாளராகப் பல்துறை அறிஞராக 67 அகவை வரை வாழ்ந்த கலாநிதி காரை செ.சுந்தரம்பிள்ளை தமிழ் மக்களால் மறக்க முடியாதவர். ✸

## தமிழரானவர் முதுசொம்

*காரை என்ற புனைபெயர் தாங்கியே*
*கவிதை வானில் எறித்த முழுநிலா*
*ஊரை தன்னெழுத் தூழியத் தால்தமிழ்*
*உலகெலாம் நிலை நாட்டிய உத்தமன்*
*ஆர வாரமற்(று) ஆய்வுகள் செய்தவன்*
*அநுப வஸ்தன் ஆசிரியர் நடுவண் ஒர்*
*தாரகை எனப் போற்றிடத் தக்கவன்*
*தமிழ ரானவர் முதுசொம்நம் சுந்தரம்*

*நாட்டுக்கூத்துக்கள் ஆடி நயந்தவன்*
*நாடகத்தின் வளங்கள் அறிந்தவன்*
*ஏட்டில் கூத்துப் பழக்கும் அண்ணாவியார்*
*இரவெ லாம்மத் தளத்தொ டிசைத்திடும்*
*பாட்டில் நெஞ்சைப் பறிகொடுத் துப்பல*
*பாத்திரங்களை ஆட்டிப் படைத்தவன்*
*வாட்டும் நோய்தரு வாதையினூடும் நம்*
*மலையகத்தவர் கூத்தை ஆராய்ந்தவன்*

*ஆராவாரங் கடந்தவன் தன்முதுகு*
*ஆரும் ஏற அனுமதிக் காதவன்*
*ஈர அன்பினன் உதவிகள் செய்வதில்*
*ஈடில்லாதவன் நட்புக் கிலக்கணம்*
*நேரில் போயிரு வார்த்தைகள் சொல்லிக்கண்*
*நீரிலாட்ட ஒண்ணாத மிகப் பெருந்*
*தூரமாம் எனும் சோகம் சுமந்தனம்*
*தூய நெஞ்சனோய்! சென்றுவா நண்பனே!*

*கண்ணை மூடிநீ தூங்குகிறாய், உன்றன்*
*காதல் மக்கள் கண்ணீர்க் கடலாட, நான்*
*என்ன வாறவர்க் காறுதல் சொல்லுகேன்!*
*ஏவர்தாம் எனக் காறுதல் சொல்லுவார்!*
*விண்ணை மூடிக் கவிந்தது காரிருள்*
*வீட்டில் எல்லா விளக்கும் அணைந்தன*
*எண்ண எண்ண இனிக்கின்ற பண்பினோய்!*
*எண்ணுகேன் உனை என்றைக்கும்*

- எண்ணுகேன்!

**- சோ.பத்மநாதன்.**

"இப்ப நாங்கள் சரியாக் கஸ்ரப்படுறம். எல்லா இடத்திலையும் ஆண்கள் பிழையாகவே நடந்து கொள்ளுகினம். பாடசாலை மாணவி என்றும் பாராமல் பஸ்ஸில உரசுறதும் பைக்கில பின்னால வாறதும் கூடிற்று. இதால என்னோட நண்பி பாடசாலைக்கே வரப் பயப்பிடுறா" — மாணவி வய 17

**நினைவிற்கொள்ளுங்கள்**

ஒவ்வொரு பிள்ளையும் பாலியல் ரீதியான இம்சைகளிலிருந்து பாதுகாப்புப் பெறும் உரிமையுடையவர்கள்

- சிறுவர் உரிமைகள் சமவாயம் - 34

?

வளர்ந்தோரே!
பாலியல் இம்சை அனுபவிப்போர் நமது பிள்ளைகளாகவும் இருக்கலாம். எனவே ஒவ்வொரு பிள்ளையையும் பாதுகாக்க முன்வருவோமா?

**உலக சிறுவர் தினத்திற்கு இன்னும் 06 நாட்களே உள்ளன.**

# பல்கலை வித்தகர் காரை செ.சுந்தரம்பிள்ளை

ஈழத்தில் வாழ்ந்துவரும் கலைஞர்களின் பெயர் குறிப்பிட்டுக் கூறும் அளவிற்கு இருப்பவர் காரை சே.சுந்தரம்பிள்ளை. இவர் ஒரு ஆசிரியர். அத்தோடு பல்கலைக்கழக விரிவுரையாளர்.

யாழ்ப்பாண ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபராகவும் இவர் திகழ்கின்றார்.

சுந்தரம்பிள்ளையின் கலைப்பணிகளும், விருதுகளும் ஏராளமானவை. ஒரு கவிஞராய், நடிகராய், பேச்சாளராய், ஆய்வாளராய் கட்டுரை ஆசிரியராய் இவர்மூலம் பரிணமிக்கும் கலைகள் ஏராளம். இவர் முதன்முதலில் ஆடிய நாட்டுக்கூத்து 'இரணிய சங்ஹாரம்'. இதில் இவர் ஏற்றுநடித்த பாத்திரம் - பிரகலாதன். முதன்முதலில் நடித்த சமூக நாடகம் பராசக்தி. பாத்திரம் - கல்யாணி. இவ்வாறு தொடர்ந்தது இவரின் நாடகப் பணி.

இவரின் கவிதை நூல்களாக தேனாறு - 1963 ஆம் ஆண்டிலும், சங்கிலியம் - 1970 ஆம் ஆண்டிலும், தவம் - 1971 ஆம் ஆண்டிலும், உறவும் துறவும் 1985 ஆம் ஆண்டிலும், பாதைமாறியபோது - 1986 ஆம் ஆண்டிலும், காவேரி- 1993 ஆம் ஆண்டிலும் வெளிவந்தன.

இவரின் கவிதைகளில் முதன்முதலில் பிரசுரமான கவிதை, புகைவண்டி என்ற தலைப்பில் அமைந்த கவிதை. இதனை, பூஞ்சோலை என்ற பத்திரிகை பிரசுரித்தது.


இவர் எழுதிய ஆய்வுநூல்களாக, ஈழத்து இசை நாடக வரலாறு - 1990 ஆம் ஆண்டும், இந்து நாகரிகக் கலை - 1994 ஆம் ஆண்டும், நடிகமணி வி.வி.வைரமுத்துவின் வாழ்வும் அரங்கும் - 1996 ஆம் ஆண்டும், சிங்களப் பாரம்பரிய அரங்கம்- 1997 ஆம் ஆண்டும் வெளிவந்தவையாகும்.

இவற்றோடு இவர் பதிப்பித்த நூல்களாக நாடக தீபம் - 1983 ஆம் ஆண்டு வெளிவந்தது. அதேபோல் 1975 ஆம் ஆண்டு கல்வி உளவியல் என்ற நூலும் வெளியாகியது.

இவரது நூல்கள் இலங்கை அரசின் சாகித்திய மண்டலப் பரிசினைப் பெற்றுக்கொண்டவையாகும். அதேவேளை - வடக்கு கிழக்கு மாகாண சாகித்திய மண்டலப் பரிசினையும் பெற்றுக் கொண்டனர்.

அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற போட்டிகளில் தங்கப் பதக்கத்தை முதற் பரிசாகப் பெற்ற இவரது ஆக்கங்கள் பின்வருமாறு-

பதுளை பாரதி கல்லூரி நடத்திய கவிதைப்போட்டி - 1968, யாழ். மாநகரசபை நடத்தி போட்டி 1969, அகில இலங்கை தமிழரசுக் கட்சி நடத்திய போட்டி - 1969, யாழ். மாநகரசபைக்குரிய (பரிசும் விருதுகளும்) மன்றக்கீதை - 1982.



காரை சே.சுந்தரம்பிள்ளையின் கலாநிதிப் பட்டத்திற்குரிய ஆய்வேடு (1990 ஆம் ஆண்டு), மிகச் சிறந்த ஆய்வேடு என பல பரீட்சகரால் பாராட்டப்பட்டது. இதற்காக யாழ். பல்கலைக்கழகம் இவருக்குத் தம்பிமுத்து கனகசுந்தரம்பிள்ளை நினைவுப் பரிசினை வழங்கியது. சுந்தரம்பிள்ளை நடிகனாக மட்டும் நின்றுவிடாது பல மேடை நாடகங்களையும் எழுதி மேடையேற்றி வந்தார். கணக்கான அந்த வகையில் மேடையேற்றிய சமூக நாடகங்களையும் தரகர் தம்பர், தம்பி கடிக்கிறான், வாழ்வும் தாழ்வும், சினிமா மோகன், சித்திரமே சித்திரமே மற்றும் இதிகாச புராண நாடகங்களாக பக்த நந்தனன், கர்ணன், தமயந்தி, வல்வெட்டி விதுசன், சிற்பியின் காதல் பெரும்புகழ் பெற்றவையாகும்.

இவற்றோடு நாட்டுக் கூத்துகளான பாஞ்சாலிசபதம், மூவிராசாக்கள், மூத்தா மாணிக்கம்மா, காமன் கூத்து போன்றவை சிறப்பானவை.

சிறுவர் நாடகங்களையும் சுந்தரம்பிள்ளை மேடையேற்றியுள்ளார். அந்த வகையில் மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம். அந்த வகையில் 1998 ஆம் ஆண்டு மேடையேறியதைத் தொடர்ந்து பாவம் நரியார் என்ற நாடகம் 1998 ஆம் ஆண்டு மேடையேறியது.

இவ்வாறு இவரது கலைப் பணிகள் ஏராளமானவை. காரை சே.சுந்தரம்பிள்ளையின் பணி கலைப்பணி என்ற ரீதியில் கவிதை நாடகம் ஆய்வு மொழி பெயர்ப்பு என பல வகைகளிலும் மேலோங்கிக் காணப்படுகிறது. பெருங்கதை வல்லுனர்களாக விளங்கும் இவர், தமிழ் உலகிற்குக் கிடைத்த அரும் பெரும் சொத்தாகவே திகழ்கின்றார்.

இவரது பணி மேலும் மேலும் வளரவேண்டும் என்பது, தமிழ் கூறும் நல்லுலகத்தோர் அனைவரதும் அவா ஆகும்.




காரைநகர் இந்துக் கல்லூரியின் உயர்தர மாணவர் ஒன்றியத்தின் இராப்போசன விருந்தில் மேற்படி கல்லூரி அதிபர் கவிஞர் காரை செ. சுந்தரம் பிள்ளை உரை நிகழ்த்திக் கொண்டிருக்கையில் எடுத்த படம்.

(படப்பிடிப்பு:- யாழ். நிருபர்)

1981

தினபதி 16-02-82



யாழ். மாநகராளுமன்ற மண்டபம் பல வருட இடைவெளிக்குப் பின் பொது மக்களின் பாவனைக்காக அண்மையில் திறந்து வைக்கப் பட்டது.

யாழ். மாநகராளுமன்ற கீதத்தை இயற்றிய கவிஞர் காரை சுந்த ரம்பிள்ளை யாழ்ப்பாண மக்களால் மாநகராளுமன்ற மண்டபத்தில் கௌரவிக்கப்பட்டார்.

யாழ்: மேயர் திரு. இராஜா விஸ்வநாதன், கவிஞர் காரை சுந்த ரம்பிள்ளைக்குப் பொன்னாடை போர்த்துக் கேடயம் வழங்கிய போது எடுத்த படம். [படம்: செ. சண்முகலிங்கம்] (ஒ—தி)

# அன்பைப் புறக்கணித்து நாம் வாழ்வதேன்?

யாழ்ப்பாணம், அக். 11

'சந்திர மண்டலத்தைக் கூட வென்றுவிட்டதாக மனிதன் தம்பட்டமடிக்கிறான். சந்திரமண்டலத்தைவென்ற மனிதனால் தன்னுடன் கூட வாழும் அடுத்த மனிதனுடைய உள்ளத்தை வெல்ல முடியவில்லை. எவ்வளவு தூரம் நாம் அன்பைப் புறக்கணித்தவர்களாகப் பின்நிற்கிறோமென்பது இதிலிருந்து தெரியவருகிறது.'

இவ்வாறு கவிஞர் காரை சுந்தரம்பிள்ளை சித்தங்கேணி கலைவாணி சனசமூக நிலைய விழாவில் பேசும்போது குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசிய கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளை, மனிதன் எவ்வளவு தான் அறிவியல் துறையில் முன்னேறினாலும் ஆத்மீகத் துறையில் முன்னேறவில்லையானால் அவனது அறிவியல் வெற்றி அழிவுக்குப் பயன்படுமே தவிர ஆக்கபூர்வமான வெற்றிக்குப் பயன்படாது என்றார்.

பண்டிதர் திரு. இராசகுரு பேசும்போது, அறவழியிற் செல்வத்தை ஈட்டி இன்பத்தை அனுபவிக்கவேண்டுமேயன்றி தீயவழியில் அதனைத் தேடக்கூடாது என்றார்.

நிலையத் தலைவர் திரு. ஆ. வயிரமுத்து தலைமையில் நடந்த இவ்விழாவில் கிராம சபை உறுப்பினர் திரு. பொன்னுத்துரையும் பேசினார்.

## * ஒரு இசைக் கண்ணோட்டம்

# இராமநாதன் நுண்கலைக்கழக

பல வருடங்களாக இராமநாதன் இசைக்கல்லூரி என்ற பெயரில் இயங்கிவந்த இராமநாதன் நுண்கலைக் கல்லூரி 1975ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஓர் அங்கமாக இணைந்தது. இதுவரை இந்தியாவுக்குச் சென்று இசை, நடனம் ஆகிய கலைகளை பல கஷ்டங்களினூடே கற்று வந்த எமது மாணவர்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாயிற்று. இக்கலைக்கழகம் கடந்த மாதம் 15,16,17 ஆகிய தினங்களிலும் ஓர் இசைவிழாவை நிகழ்த்தி, கர்நாடக இசைப் பிரியர்களுக்குப் பெருவிருந்தளித்து மகிழ்வித்தது.

முதல்நாள் நிகழ்ச்சிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறை, நுண்கலைப்பிரிவுத் தலைவர் பிரம்மஸ்ரீ கா. கைலாசநாதக் குருக்களும், இரண்டாம்நாள் நிகழ்ச்சிக்கு கலைப்பீடத் தலைவர் பேராசிரியர் க. கைலாசபதியும், மூன்றாம்நாள் நிகழ்ச்சிக்குத் துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களும் தலைமைதாங்கிச் சிறப்பித்தனர்.

ஒவ்வொரு நாள் நிகழ்ச்சியும் இரண்டு பிரிவுகளாக அமைந்தது. ஒன்று முழுக்க முழுக்க இறுதியாண்டு மாணவர்களே பங்குபற்றிய இசை நிகழ்ச்சி. மற்றது நுண்கலைப் பிரிவு இசை விரிவுரையாளர்கள் பங்குபற்றிய இசை நிகழ்ச்சி.

மூன்று நாளும் நடைபெற்ற மாணவர்களுடைய இசை நிகழ்ச்சியைப் பற்றிக் கூறுவதாயின் அவர்கள் தாம் கற்றவற்றை அழகாக மேடையில் ஒப்புவித்தனர். கொடுக்கப்பட்ட நேரம் போதாத காரணத்தினால், கற்பனை ஸ்வரம் பாடியோ அல்லது ராக ஆலாபனை செய்தோ தமது தனித்துவத்தை வெளிப்படுத்த முடியவில்லை. ஆயினும் பாடிய உருப்படிகளை ஆசிரியர்கள் பாடம் சொல்லிய வண்ணம் பக்குவமாகப் பாடினார்கள் என்றே கூறவேண்டும்.

இசை விரிவுரையாளர்களுடைய நிகழ்ச்சியில் முதலாம் நாள் முதல் நிகழ்ச்சியாகச் செல்வி குலபூஷணி குலசேகரம் அவர்கள் பாடினார்கள். நல்ல சாரீரவளம் படைத்த இவர் சக்ரவாக ஆரம்ப உருப்படியிலேயே கச்சேரியைக் களைகட்டச் செய்துவிட்டார். சிம்மேந்திரமத்திமராகத்தை விரிவாக ஆலாபனம் செய்து மூன்று ஸ்தாயிகளிலும் பாடிச் சபையோரைக் கவர்ந்தார். மூன்று ஸ்தாயிகளிலும் இவருடைய சாரீரம் நன்றாகப் பேசுகிறது. எதிர்காலத்தில் நல்ல பாடகியாக வருவார் எனத் தெரிகிறது.

இதைத் தொடர்ந்து நடைபெற்ற இரு வயலின் இசை சபையோரை மிகவும்கவர்ந்தது. செல்வி குலதேவி சுப்பையாவும் திருமதி ஞானம்பிகை பத்மசிகாமணியும் இணைந்து வயலின் வாசித்தனர்.

இருவருமே பல வருடங்களாக பக்கவாத்தியமாக வயலின் இசைத்துப் பெயர் பெற்றவர்கள். ஒவ்வொருவரும் தமக்கென ஒரு தனித்துவமான பாணியை உடையவர்கள். ஒரே இசைக்கல்லூரியில் பயின்றுபட்டம் பெற்றவர்கள். இவர்கள் இருவரும் சுருட்டி ராக வர்ணத்துடன் ஆரம்பித்த கச்சேரி மிகவும் விறுவிறுப்பாக அமைந்தது. ஒருவர் மாறி ஒருவராகச் ஸ்வரக் குறைப்புச் செய்தமை காதுக்கு ரம்மியமாகஇருந்தது. பந்துவராளி ராகத்தை ஆலாபனை செய்து உருப்படி வாசித்தமுறை அதற்கு ஸ்வரக் குறைப்புச் செய்தமை கச்சிதமாக இருந்தது. இவர்களுடைய இந்த இணைப்பு நிரந்தரமாக அமைய வேண்டும். பல கச்சேரிகள் செய்து வயலின் பிரியர்களை மகிழ்விக்கவேண்டும் என்பது எமது விருப்பமாகும். சங்கீத வித்துவான் ஏ.எஸ். இராமநாதன் அவர்கள் வழமைபோல பக்கவாத்தியமாக மிருதங்கம் இசைத்தார்.

முதலாம் நாள் இறுதிநிகழ்ச்சியாக திரு. ஏ.கே. கருணாகரனுடைய பாட்டு இடம் பெற்றது. கச்சேரி அனுபவமும், நல்ல சாரீர சுகமும் படைத்த கருணாகரனுடைய கச்சேரி மிகவும் அருமையாக அமைந்தது. வழக்கமாக மோகன ராகத்தை விஸ்தாரமாக இவர் பாடுவதை நான் பிறமேடைகளில் கேட்டுள்ளேன். ஆனால் இன்று அதை ராக ஆலாபனை செய்யாமல் உருப்படியைமட்டும் பாடி கச்சேரியைக் களைகட்டச்செய்துவிட்டார். கௌரி மனோகரி ராகத்தை ஆலாபனை செய்து விஸ்தாரமாகப் பாடினார். எல்லாஸ்தாயிகளிலுமே பேசக்கூடிய, இவருடைய சாரீரம் பிர்க்கா பிரயோகங்களில் [illegible] அற்புதமாக அமைந்தது. பந்துவராளி பஜன் பாடி இரசிகர்களை மெய்மறக்கச் செய்துவிட்டார் என்றே கூறவேண்டும். பிரபலமான பக்கவாத்தியக்காரர்களை விடுத்து வளர்ந்துவரும் கலைஞர்களை பக்கவாத்தியமாக அமைத்து இவர் கச்சேரி செய்தமை வரவேற்க வேண்டிய விடயமாகும்.

வயலின் இசைத்த செல்வி பாக்கியலட்சுமி நடராஜாவும் மிருதங்கம் வாசித்த திரு. என். சோமாஸ்கந்த சர்மாவும் இன்னும் அனுபவம் பெற்று நல்ல வித்துவான்கள் ஆவார்கள் என எதிர்பார்க்கின்றேன்.

## தமிழ் உருப்படிகளுக்கு பாடகர்கள் அதிக இடம் கொடுக்க வேண்டும்

இரண்டாம் நாள் விரிவுரையாளர்கள் நிகழ்ச்சியில் முதலாவதாக இடம்பெற்றது செல்வி சிவசக்தி சிவப்பிரகாசபிள்ளையின் பாட்டு.

இவர் பாடிய தோடிராக ஆலாபனை கச்சிதமாக இருந்தது. அதில் எடுத்துக்கொண்ட உருப்படி தெளிவாகவும் சுத்தமாகவும் அமைந்ததை அவர் பாடிய பக்குவத்திலிருந்தே காணக்கூடியதாக இருந்தது. தெளிந்த ஞானமும் சுத்தமான பாடும் தரமும் இவரிடமுள்ளது.

# மூன்று நாள் விழா

## காரை. செ. சுந்தரம்பிள்ளை

கமையான இவருடைய சாரீரத்தைப் பயிற்சியால் கனிவித்து முன்னேறியுள்ளார். இவருக்கு நிச்சயமாக நல்லதொரு எதிர்காலமுண்டு.

இரண்டாவது நிகழ்ச்சியாக இரு வீணையிசை நடைபெற்றது. செல்வி மாலினி ஸ்ரீநிவாசனும், செல்வி நந்தினி சோமசுந்தரமும் இணைந்து வீணை இசைத்தனர்.

செல்வி மாலினி ஸ்ரீநிவாசன் பல மேடைகளிலும் வானொலியிலும் வீணையிசைத்து அனுபவம் பெற்றவர். செல்வி நந்தினி சோமசுந்தரம் புதிய வீணைவித்துவான். இருந்தபோதும் இருவருமே ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்காமல், சுரக் குறைப்புச் செய்தமையும் அழகிய கமகங்கள் மூலம் நாதமெழுப்பியமையும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். மிருதங்க வித்துவான் எ. சந்தான கிருஷ்ணன் அனுசரணையாக வாசித்துக் கச்சேரிக்கு உயிரூட்டினார். இவர் நுண்கலைக் கழகத்தைச் சாராதவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இரண்டாம் நாள் இறுதி நிகழ்ச்சியாக திருமதி ஜெகதாம்பிகை கிருஷ்ணானந்த சிவத்தினுடைய பாட்டு இடம் பெற்றது. இவர் ஈழத்தில் உள்ள பிரபலமான பாடகி. பத்து வருடங்களுக்கு மேலான மேடை அனுபவம் உள்ளவர். சுருதிபிசகாமல் பாடும் ஆற்றல் படைத்தவர். நாட்டை ராக உருப்படியுடன் இவர் கச்சேரியை ஆரம்பித்தார். ஆயினும் இரண்டாவது பந்துவராளி உருப்படியுடன்தான் கச்சேரி களைகட்டத் தொடங்கியது.

ஹரஹரப்பிரியா உருப்படியைப் பிரதான அம்சமாக எடுத்து ராக ஆலாபனை செய்து சபையோரை மிகவும் கவர்ந்தார்.

மூன்றாம்நாள் விரிவுரையாளர்கள் நிகழ்ச்சியின்போது முதலாவதாக திருமதி தை. பரந்தாமனின் பண்ணிசை நிகழ்ச்சி இடம்பெற்றது. ஓரளவு சம்பிரதாயமாகப்பாடிய இவர் பிறரைப்போல், கர்நாடக இசைக்கச்சேரியாக மாற்றாமல் பண்ணிசைக் கச்சேரியாகவே நிகழ்த்தினார்.

இரண்டாவது நிகழ்ச்சியாக திரு. ஆ. சத்தியசீலனின் வீணை இசை இடம்பெற்றது. இது இவருடைய முதலாவது கச்சேரியென அறிகின்றேன். முதலாவது கச்சேரி என்ற வகையில் இது இவருக்கொரு வெற்றியையே தந்துள்ளது எனலாம். அடாணாராக உருப்படி ஆரம்பத்திலேயே கச்சேரிக்கு வேகத்தைக் கொடுத்தது. ஹரஹரப்பிரியா ராகத்தைப் பிரதான அம்சமாகக் கொண்டு தானம் வாசித்தமை நன்கு அமைந்தது. இவர், வாசிக்கும்போது கமகங்களுக்கும் முக்கியம் கொடுத்து வாசிப்பாரேயில் நல்லதொரு வீணைவித்துவானாக மிளிர்வார் என்பதில்சந்தேகமில்லை. வீணைத்துறையில் ஆண்கள் இல்லை என்ற குறையையும் இவர் தீர்த்து வைப்பார் என எதிர்பார்க்கின்றேன்.

மூன்றும் நாள் இறுதி நிகழ்ச்சியாக திருமதி சரஸ்வதி பாக்கியராஜாவின் பாட்டு இடம்பெற்றது. நீண்டகாலமாக ஈழத்தில் கர்நாடக இசைத் துறையில் நிலைத்து நிற்கும் இவர், இன்றும் சாரீரத்தை நன்முகப் பேணி வருவது பாராட்டப்பட வேண்டியதொன்றாகும். நல்ல சாரீரவளமும் கச்சேரி செய்யும் பாணியும் நன்கு அறிந்த இவர் தமிழ் உருப்படிகளையும் பாடி இரசிகர்களை மகிழ வைத்தார். விழிக்குத் துணை என்ற கந்தலங்காரப் பாடலும் மோகனராக ஆலாபனையும் இரசிகர்களை மிகவும் கவர்ந்தன.

மூன்று நாளும் நிகழ்ச்சிகள் குறிப்பிட்ட நேரத்துக்கு ஆரம்பித்தமையும் முடிவடைந்தமையும் பாராட்டப்படவேண்டிய விடயமாகும்.

இக்கச்சேரிகளைக் கண்டு களித்த என்மனத்தில் பின்வரும் சிந்தனைகள் எழுந்தன. மாதமொரு மூன்றுமணித்தியாலக் கச்சேரியை இராமநாதன் நுண்கலைக் கல்லூரி இனிமேல் நடத்தவேண்டும். தமிழ் உருப்படிகளுக்குப்பாடகர்கள் முக்கிய இடம்கொடுக்கவேண்டும். பேராசிரியர் க. வித்தியானந்தன் குறிப்பிட்டது போல, நுண்கலைக் கல்லூரிக்கென நல்லதொரு மண்டபத்தைப் பணம் படைத்த வள்ளல்கள் மனமுவந்து [illegible]

சென்னை கர்நாடக சங்கீத இசைக்கல்லூரி, அண்ணாமலைப் பல்கலைக்கழக இசைக் கல்லூரி போன்றவையோடு இணையாக வைத்து எண்ணப் படக்கூடிய கல்லூரியாக இராமநாதன் நுண்கலைக்கல்லூரி வளர்ச்சிஅடைய வேண்டும்.



ஈழத்துச் சிறந்த கலைஞரான காரை செ. சுந்தரம்பிள்ளை எழுதிய [illegible] என்னும் கவிதைத் தொகுதிக்கு இந்த வருடம் சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்திருக்கிறது. யாழ். இலக்கிய வட்ட இணைச் செயலாளரான கவிஞர் சுந்தரம்பிள்ளை 1967ம் ஆண்டு அகில இலங்கை கவிதைப் போட்டியில் முதற் பரிசாக தங்கப் பதக்கம் பெற்றவர். அகில இலங்கை காவியப் போட்டியிலும் 'சங்கிலியம்' என்னும் காவியத்திற்கு முதற் பரிசாக ரூபா 500/- பெற்றவர். [illegible] நாடகங்கள் எழுதியவரும், தயாரிப்பாளருமாவார்.

லண்டன் பல்கலைக் கழகப் பட்டதாரியான இவர் தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பரிச்சயமுள்ளவர். [illegible] ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

3 வைகாசி 1981

# இராமநாதன் பல்கலைக்கழக

# இசைவிழா!

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் ஓர் அங்கமாகிய இராமநாதன் நுண்கலைக்கழகம் இசை விழா ஒன்றினைக் கடந்த 22, 23, 24 ஆகியதிகதிகளில் வெற்றிகரமாக நடத்தியது.

மூன்று நாட்கள் தொடர்ந்து நடந்த இசை விழா கடந்த வருடத்தைப் போலவே இரண்டு பிரிவுகளைக் கொண்டிருந்தது. ஒன்று முழுக்க முழுக்க இறுதி ஆண்டு இசைக் கல்லூரி மாணவர்கள் பங்கு பற்றிய இசைநிகழ்ச்சி, மற்றையது விரிவுரையாளர்கள் பங்கு கொண்ட இசை நிகழ்ச்சி.

மாணவர்கள் பங்கு பற்றிய நிகழ்ச்சி பற்றி சிறப்பாக இங்கே குறிப்பிட வேண்டும். இசைத்துறையில் மாணவர்கள் நல்ல முன்னேற்றம் பெற்றிருக்கிறார்கள். ஆசிரியர்கள் போதித்த பாடாந்தரத்தையே கிளிப் பிள்ளைகள் போல ஒப்புவித்தாலும் கூட அதிலே ஓர் ஒழுங்கு இருந்தது. கச்சேரி செய்யும் பாணி நன்கு புலப்பட்டது. சுருதி பிசகாமலும், இனிமையாகவும் இவர்கள் பாடினார்கள். இவர்கள் இங்கேபெற்ற அனுபவம் கல்லூரியை விட்டு வெளியேறிய பின்வரும் எமது நாட்டுக்கும், இசைத் துறைக்கும் பெரிதும் பயன்படும் எனப் பூரணமாக நம்பலாம்.

மாணவர்களுடைய நிகழ்ச்சியில் இந்த வருடம் ஒரு முன்னேற்றம் காணப்பட்டது. இசைக்க கருவிகளை மிக லாவகமாக இவர்கள் கையாண்டார்கள். வீணை இசைத்த மாணவர்களும், வயலின் இசைத்த மாணவர்களும் சபையை நன்கு கவர்ந்தார்கள். குறிப்பாக வயலின் மாணவர்கள் சுரக் குறைப்புத் திர்மானம் செய்தமை அவர்களுடைய வளர்ச்சியை எடுத்துக் காட்டுகிறது. மாணவர்களுடைய நிகழ்ச்சிகளில் இருந்து கல்லூரிபெரிதும் வளர்ந்த விட்டது என்பதை நாம் கவனிக்கக் கூடியதாக உள்ளது.

விரிவுரையாளர்களுடைய நிகழ்ச்சி மூன்று பிரிவுகளை உள்ளடக்கியது. ஒன்று பாட்டுக் கச்சேரி, இரண்டாவது வீணைக் கச்சேரி, மூன்றாவது வயலின் கச்சேரி.

பாட்டுக் கச்சேரியில் ஆறு விரிவுரையாளர்கள் தனித் தனியே பங்கு பற்றினார்கள். முதலாவதாக திருமதி சிவ் சக்தி சிவநேசன் பாடினார்.

நமாமி விக்ன விநாயக... என்னும் ஹம்சத்வனி ராக உருப்படியுடன் ஆரம்பித்த இவருடைய கச்சேரி படிப் படியாகக் களைகட்டத் தொடங்கியது. தொடக்கத்தில் கனமாக இருந்த இவருடைய சாரீரம் மெல்ல மெல்ல இனிமை பேசத் தொடங்கியது.

"யாரோ... இவர் யாரோ ......" என்னும் பைரவி இராக உருப்படியும், "திராத விளையாட்டுப்பிள்ளை" என்னும் சிந்து பைரவியில் அமைந்த பாரதியார் பாடலும் கச்சேரிக்கு மெரு கூட்டின. மிகவும் நிறைவான ஒரு கச்சேரியாக இது அமைந்தது.

பக்க வாத்தியங்களாக மிருதங்கம் வாசித்த திரு. எஸ். மகேந்திரனும், வயலின் இசைத்த பாக்கியலக்ஷ்மி நடராஜாவும் அனுசரணையாகவாசித்தனர்.

இரண்டாவதாக திரு. ஏ. கே. கருணாகரன் பாடினார். ஈழத்திலேயே தலை சிறந்த பாடகர்களுள் ஒருவர் இவர். கருட கமன என்னும் நாகஸ்வராளி உருப்படியுடன் ஆரம்பித்த இவருடைய கச்சேரி ஆரம்பத்திலேயே களை கட்டத் தொடங்கியது.

டது. இருந்த போதும் இ
பாடிய சாமஜ வரக
என்னும் இந்தோள ராக
ப்படியும் காணக் கண்
வேண்டும் என்னும் க
போதி ராக உருப்படி
நன்றாக அமைந்தன.

ஐந்தாவதாக தி
ஜெகதாம்பிகை இரு

## ஒரு கண்ணோட்ட

பரலோக சாதவமே என்னும் பூர்வி கல்யாணி இராக உருப்படியை ராக ஆலாபனை செய்து சுரக் குறைப்புச் செய்தமை அற்புதமாகஅமை

**காரை**
**செ. சுந்தரம்பிள்ளை**

ந்தது. என்றைக்கோ நாம் கேட்ட "பாரோக் கிருஷ்ணையா" என்னும் ராகமாலிகையில் அமைந்த உருப்படி கருணாகரனால் புத்துயிர் பெற்று எம்மை மெய் சிலிர்க்கவைத்தது. இவருக்கு ஈழத்திலேயே புகழ் பெற்ற மிருதங்க வித்துவான் சந்தான கிருஷ்ணன் மிகவும் அனுசரணையாக வாசித்தார்.

மூன்றாவதாக செல்வி குலபூஷணி குலசேகரம் பாடினார். இயற்கையாகவே நல்ல சாரீர வளம் பொருந்தியவர் குலபூஷணி. இவர் பிரதான அம்சமாக எடுத்து ராக ஆலாபனை செய்து பாடிய ஓரங்க சாயி என்னும் காம்போதி ராக உருப்படி நன்றாக அமைந்தது.

நான்காவதாக திருமதி சரஸ்வதி பாக்கியராஜா பாடினார். அவர் பாடத் தொடங்கவே ஒலிபரப்பி மக்கர் பண்ணத் தொடங்கிவிட்

வந்த்சிவம் பாடினார்.
தான அம்சமாக ம
மாவதி ராகத்தை ஆலா
செய்தார். ஸ்ரீ கணபதி
னும் சௌராஷ்டிர ராக
அமைந்த உருப்படியை
முத்துக் குமரையனே
னும் சங்கராபரண உ
டியையும் வழமை போ
நன்றாகப் பாடினார்கள்.

பாட்டுக் கச்சேரி
இறுதி நிகழ்ச்சியாக திரு
தை. பரந்தாமன் தே
திருவாசக திருப்பாகர
ளைப் பண் இசை வரி
சுமைய அன்று திருப்பா
ங்களைப் பாடியமை பார
டிற்குரியது.

இசை நிகழ்ச்சியின் இ
டாவது அம்சமான வீ
கச்சேரியில் முதலாவ
செல்வி நந்தினி சோம
ரம் வீணை இசைத்தார்க
முக்கிய அம்சமாக க
போதி இராகத்தை எடு
இராக ஆலாபனை செ
சபையோரின் பாராட்
டைப் பெற்றார்.

அடுத்ததாக வீணை இ
ந்த செல்வி மாலினி ஸ்ரீ
சன் குறிப்பிடத் தக்கவ
இவர் பிரதா
அம்சமாக எடு
இசைத்த ஸ்ரீரஞ்சனி ர

(9ஆம் பக்கம் பார்க்க)

# காட்டு மலையானே!

காரை. செ. சுந்தரம்பிள்ளை

## வெண்பா

காட்டு மலையானே கந்தா கடம்பாதென்
னாட்டு மலையானே நற்குமரா — ஈட்டுகலைச்
சித்திரத் தேரேறுஞ் செவ்வேளே நின்கருணை
முத்திரையே வேண்டும் முதல்.

## விருத்தம்

நாடுபுகழ் நாவலம் பதியிலே பக்தர் நலிவின்றி வாழவருள் புரிகின்ற முருகா
நாடுமடி யார்களிடர் ஓடவுளம் பூக்கும் ஞானகுரு வானவடி வேலவா போற்றி
தேடியெமை யாள்கின்ற தெய்வமே ஞானச் சிவசுப்ர மணியனே சிறீகந்த வேளே
வாடிமெலி கின்றபோ தாட்கொள்ள வேண்டும் வள்ளிமண வாளனென வந்தபெரு மானே.

சங்கரன் நெற்றியிற் கனலாகத் தோன்றிச் சரவணப் பொய்கையில் தமிழ்த்தெய்வ மான
செங்கதிர் மேனியன், ஈராறு வீரத் திண்புயம் கொண்டுவே லொன்றை யெடுத்துப்
பொங்கிய ஆணவச் சூரனை வீழ்த்திப் புகழ்மிக்க அமரர்தம் ஆபத்தை நீக்கி
மங்கையர்க் கணிதேவ யானையைச் சேர்ந்த மணாளனின் சித்திரத் தேர்காண வாரீர்.

ஆதியாய் அந்தமாய் அநாதியாய் எங்கள் அன்னையாய் அப்பனாய் அனைத்துமாய் நாளும்
பேதியா தாள்கின்ற பிரணவப் பொருளே பேரிடர் தீர்க்கின்ற பேரொளிப் பிழம்பே
வாதிட்ட ஔவையின் தமிழுண்ட சேயே வானவர் துயர்கொன்ற வச்சிர வேலே
சோதியே நாவலம் பதிமேவு கின்ற சுந்தரக் கந்தனே (இ)ரதமேறி யருள்வாய்.

பனிசிந்து மலர்கொண்டு பதம்போற்று வார்க்குப் பவம்போக்கி யருள்கின்ற பார்ப்பதி மைந்தன்
கனிசிந்து மலைவாழும் கலியுகக் கந்தன் கற்பூர தீபத்திற் களிகொள்ளும் வேலன்
தனிநின்று மனம்வாடு மடியார்கள் நெஞ்சில் தணியாத ஒளியான தயாவான செல்வன்
தினையுண்டு மணங்கொண்ட சித்திரத் தேரோன் தெருவீதி வருகின்ற அணிகாண வாரீர்!

அச்சம் தவிர்க்கின்ற வேல்கொண்டு வருவான் அடியார்க்கு நல்லவன் அருள்மாரி பொழிவான்
இச்சைக் கிலக்காகி வாழ்கின்ற எம்மை ஈடேறச் செய்கின்ற வுபாயங்கள் சொல்வான்
பச்சைமயில் மீதினில் ஊர்வலங் கொள்வான் பக்தர் மகிழ்ந்திடத் தேரேறி யூர்வான்
கச்சிளங் கொங்கைகுற வள்ளிமண வாளன் காட்டுமலை மேவுதமி ழானமுரு கோனே.

நுங்குகள் கற்பகத் தருமீ திருக்க நுகர்கின்ற அணில்சென்று நுட்பமாய்க் கோதிப்
பங்கிட்டுத் துணையோடு பகிர்ந்துண்ணு கின்ற பண்பட்ட நாவலம் பதியிலே பச்சைத்
தெங்கிளஞ் சோலைகள் எங்குமே சூழும் தெவிட்டாத நற்கனித் தோட்டங்கள் வாழும்
சங்கினம் முத்தீனும்; தமிழ்ப்பாடல் கேட்டுத் தரையெங்கும் பயிர்பச்சை பூத்துச் சிரிக்கும்.

காட்டுக் கதிரைமலைக் கந்தனைப் போலோர் கண்கண்ட தெய்வமிப் புவிமீதில் இல்லை
ஆட்டும் பெரும்பாவச் சுமைநீக்கு கின்ற ஐயனை அப்பனை ஆனந்தத் தேனை
ஈட்டும்நற் புண்ணியத் தால்நாவ லூரில் (இ)ரதமேறி வருகின்ற ஓராறு முகனை
நாட்டுக்கோர் தெய்வமாய் வாய்த்தநற் சேயை நாவார வாழ்த்தி வணங்குவோம் வாரீர்.

## வெண்பா

நாவற் பதிமேவும் நற்குமரன் தேர்க்காட்சி
யாவர்க்கும் வாய்க்கா தருங்காட்சி — தேவர்க்கும்
கிட்டாத பேறு கிடைத்ததே; ஆகையினால்
விட்டோடிற் றேபாவ வேர்.

காட்டுமலைக் கந்தன் புதியதேர் — சித்திரத்தேர்

# லண்டன் கண்காட்சியில் 'சங்கிலியம்' காவியம்

## காரை சுந்தரம்பிள்ளையின் 'ஈழநாடு' வெளியீட்டுக்கு கௌரவம்

(கொழும்பு)

இலங்கையில வயது வந்தோருக்கு வாக்குரிமை வழங்கியதன் 50-வது ஆண்டு தினத்தையொட்டி லண்டன் பொதுநல அமைப்பு நிறுவனத்தில் இலங்கை அரசினால் நடாத்தப்படும் கண்காட்சியில் 'ஈழநாடு' வெளியீடுகளில் ஒன்றான கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளை எழுதிய "சங்கிலியம்" நாவலும் வைக்கப்படவுள்ளது

இவ்வாண்டு ஜூன் மாதம் 16-ம் திகதி முதல் செப்டம்பர் மாதம் 1-ம் திகதி வரை நடைபெறும் இக்கண்காட்சியைப் பிரிட்டிஷ் மகாராணி எலிஸபெத் ஆரம்பித்து வைக்கிறார்.

இக்கண்காட்சியின் விசேட அம்சமான 'இலங்கை நூலகப் பிரிவில்' வைப்பதற்கு 'சங்கிலியம்' நூலின் ஒரு பிரதியைத் தமக்கு அனுப்பி வைக்குமாறு பிரதமரின் செயலாளர் திரு பிராட்மன் வீரக்கோன் திரு சுந்தரம்பிள்ளையைக் கடிதம் மூலம் கேட்டுள்ளார்.

1970ம் ஆண்டு வெளியிடப்பட்ட 'சங்கிலியம்' காவியம் 69-ம் ஆண்டு 'ஈழநாடு' 10வது ஆண்டு நிறைவையொட்டி நடைபெற்ற இலக்கியப் போட்டியின் அங்கமான காவியப் போட்டியில் முதலாவது இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது. (இ)

# ஒழுக்கத்தைக்காத்த உயர்

# போற்றி வளர்த்த புராதன

இந்து மதக் கல்வி மரபு மிகவும் தொன்மையானது- இந்திய மக்கள் மிகப் பழைய காலத்திலிருந்தே தமக்கென ஒரு தனித்துவமான கல்வி முறையைக் கொண்டிருந்தனர்- இந்தியப் பண்பாட்டை விளக்கும் காலத்தால் முந்திய ஆவணங்களாகத் திகழ்பவை நான்கு வேதங்களுமாகும்- வேதங்கள் வழி வழியாக இந்துக்களால் போற்றப்பட்டு, பிற்காலச் சந்ததியினருக்குக் கையளிக்கப்பட்டுள்ளன-

வேதகாலம் இததானென அறுதியிட்டுக் கூறுவதற்கு அறிஞர்கள் பலர் முயற்சித்திருக்கிறார்கள்- பேராசிரியர் வின்ரேவிச் போன்றவர்கள் கி- மு. 2000 அல்லது கி. மு- 2500 ஆண்டுகளுக்கு முற்பட்டது. என்பர் வேறு சிலர் கி- மு. 1500 வருடங்களுக்கு முற்பட்டது. வேதகாலமென்பர்- பொதுவாக கி. மு- 1000வருடங்களுக்கு முன்னர் தொகுதி தொகுதியாக இந்தியாவுக்குள் நுழைந்த ஆரியர்களுடைய பண்பாட்டை விளக்குவன வேதங்கள் என்பர்- ஆனால் ஆரியர்கள் அல்லாதவர்களுடைய பண்பாடும் இருக்கு வேதத்தில் காணப்படுகின்றது என்று கூறுவர் சுரேந்திரநாத் தாஸ்குப்தா-

ஆரியர்கள் இந்தியாவுக்கு வந்த இந்து நதிப் பள்ளத்தாக்கிலும் கங்கை நதிப் பள்ளத் தாக்கிலும் குடியிருக்கத் தொடங்கினர்- அவ்விடங்களில் பாதுகாப்பாகவும் வசதியாகவும் வாழ்ந்தனர்- அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்வதற்குரிய வசதிகளும் வாய்ப்புகளும் அவர்களுக்கு நிறையக் கிடைத்தன- அத்தகைய சூழ்நிலையில் அம்மக்களுடைய உள்ளம் சிந்தனையில் ஈடுபடத் தொடங்கியது- மனிதனைப் பற்றியும் உலகத்தைப் பற்றியும் அவர்களுடைய சிந்தனை தொடர்ந்தது. அது உலகம், ஆன்மா, பிரமம் என விரிவடைந்தது- அவ்வாற அவர்கள் கத்கவ் ஆராய்ச்சியில் ஈடுபடத் தொடங்கிய காரணத்தினால் மிகச் சிறந்த ஞான நூல்கள் உலகுக்குக் கிடைத்தன-

ஆரியர்களுடைய கல்வி மரபை பிராமணக் கல்வி மரபு என்றும் அழைப்பர்- பிராமணக் கல்வி மரபே வளர்ச்சி பெற்ற இந்துமதக் கல்வி மரபாக முகிழ்த்தது-

ஒவ்வொரு நாட்டின் கல்வியமைப்பிலும் அந்நாட்டு மக்களுடைய தேசியப் பண்புகள் பிரதிபலிக்கக் காணலாம்- தேசிய உணர்வுகள், சிந்தனைகள், செயற்பாடுகள் என்பனவற்றைக் காட்டுவனவாக இந்துமதக் கல்வி மரபும் காணப்படுகிறது- இவை தவிர சமயத் தத்துவங்களும் அரசியற் சித்தாந்துங்களும் விரவியிருப்பதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது-

## பண்டைய இந்துமதக் கல்வி மரபு

பிற நாடுகளில் சமயத்தைத் தொடர்ந்தே தத்துவ ஆராய்ச்சி ஆரம்பமானது- ஆங்கெல்லாம் சமயம் என்கின்ற அத்திவாரத்திலிருந்து கட்டப்பட்டவையே தத்துவங்களாகும்- ஆனால் இந்திய தத்துவம் சமயத்தினின்றும் எழவில்லை- சுதந்திரமான சிந்தனையினின்றும், கருத்தக் குவியல்களினின்றும் எழுந்ததாகும்- அவற்றின் தொடர்பாக அறிவும், ஆற்றலும் நியாயம் காணும் தன்மையும் மெய்ம்மைவாதமும் வளர்ச்சி பெறலாயின-

இந்தியாவில் தத்துவத்தை அடுத்தே சமயம் தோன்றியது- ஆனால் எந்தச் சமயமும் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதை மறுப்பதற்கில்லை-உண்மையென்பது பல பக்கங்களையுடையது- அதனைப் பல வகையாகவும் ஆராயலாம்- சமயமும் குறிப்பிட்ட தத்துவக் கருத்துக்களுள் அடக்கக் கூடிய தொன்றாகும்-


காரை செ. சுந்தரம்பிள்ளை
(விரிவுரையாளர் பலாலி ஆசிரிய கலாசாலை)


இந்த சமுதாயம் மிகுந்த சகிப்புத் தன்மையும் சுதந்திரப் போக்கும் கொண்டது- அதனால் தான் கடவுளை நம்புகின்றவனுக்குள்ள சுதந்திரமும் உரிமையும் கடவுளை நம்பாதவனுக்கும் இருந்திருக்கின்றன-

இந்திய மக்களுடைய சிந்தனையில் மதமும் தத்துவமும் பெரும் தாக்கத்தை உண்டாக்கின- அதனை அக்காலக் கல்வியமைப்பில் காணக் கூடியதாக உள்ளது-

இந்த மதம் பின்வரும் இயல்புகளைக் கொண்டு சிறந்து விளங்கியது-

1- அறிவுக்கும் ஆற்றலுக்கும் இந்த மதம் முதலிடம் வழங்கியது-

2. சகிப்புத் தன்மையைக் கொண்டிருந்தது-

3- நீதிக்கும் நியாயத்திற்கும் சிறப்பிடம் தந்தது.

4- உயர்ந்த தரிசனத்தை உடையது.

5- நல்லனவற்றை எளிதில் ஏற்றுக் கொள்ளும் தன்மையுடையது-

சிறந்தனவற்றை ஏற்றுக் கொள்ளும் பண்பு காரணமாகத் தான் பௌத்தம், சமணம், கிறிஸ்தவம் ஆகிய மதங்களிலின்றும் புதுப்புதுக் கருத்துக்களை இந்துமதம் ஏற்றுக் கொண்டது- ஒரு சிலஅறிஞர்கள் இக் காரணங்களை விட்டு இந்த மதம் செயற்கைத் தன்மையுடைய தென்றும் தனித்துவமற்ற தென்றும் குற்றஞ் சாட்டுகின்றனர்- இதுவே இந்த மதத்தின் தனித்துவமெனலாம். எனினும் இவ்வியல் பினுற் ருன் 3000 வருடங்களுக்கு மேலாக இந்துமதம் பலவிதமான தடைகளையும் மீறி வளர்ச்சி பெற்று வந்திருக்கிறது- இவ்வாறு இந்துமதத்தை வளர்த்து வந்தவர்கள் ஆச்சாரியர்களாவர்- ஆச்சாரியர்கள் எனப்பட்டோர். ஒழுக்கத்தைக் காத்து வந்த உயர்ந்த ஞானிகள்- அவர்கள் வளர்த்த மரபு தான் இந்துமதக் கல்வி மரபு-

ஆரியர்கள் இயற்கை வழிபாட்டினர்- சூரியன், சந்திரன், பிருதுவி, அப்பு, தேயு, வாயு முதலிய இயற்கைப் பொருள்களை யெல்லாம்கடவுளர்களாக எண்ணி வழிபட்டனர்- அவற்றிற்கு வேள்விகளும் செய்தனர். வேள்விகள் செய்யும் புரோகிதர்கள் பலர் வேத மந்திரங்களைக் கற்றுச் சிறந்தனர்- அப்புரோகிதர்கள், தந்தை மகனுக்கும், மகன் அவனுடைய மகனுக்குமாக வாய்மொழி மூலம் மந்திரங்களைக் கற்பித்து வந்தனர்- இவ்வாறு மதகுருமார் பலர் கற்றுத் தெளிந்தனர்-

வானப்பிரஸ்தர்கள் வனங்களில் தவஞ் செய்தனர்- அவர்கள் வேள்வி செய்யாது சிந்தனை வழி நின்று மெஞ்ஞானம் வரப் பெற்றனர்- அம் மெஞ்ஞானத்தின் வடிவங்களாக உப நிடதங்கள் பல தோன்றின- வேதங்கள், பிராமணங்கள், ஆரணியங்கள், உப நிடதங்கள் எனத் தோன்றியஞானக் களஞ்சியங்கள் அனைத்தையும் ஆசிரியர்கள் தம் மாணவர்களுக்கு ஊட்டி வந்தனர்-

வேத உபநிடதங்கள் கற்றறிந்த உயர்மட்டத்தினருக்கே உரியனவாக அமைந்தன- சாதாரண பாமர மக்களுக்கு வேதோப நிடதங்களை விளக்குதற்கும், அறநெறிகளைக் கூறுதற்கும் எழுந்தனவே இதிகாச புராணங்களும், தர்ம சாஸ்திரங்களுமாகும்- அவற்றுள் இதிகாச புராணங்கள் கதைகள் மூலம் அறநெறிகளைப் போதித்து வந்தன-

பண்டைய இந்தியாவில் மக்களுடைய வாழ்க்கை சமய தத்துவங்களுடன் பின்னிப் பிணைந்திருந்தது- கல்வி பெரும் பாலும் இரண்டு நோக்கங்களைக் கொண்டிருந்தது- அவற்றுள் ஒன்று ஆன்மீக நோக்கு, மற்றையது வாழ்வு நோக்கு- தன்னுள்ளிருக்கும் பிரமத்தை உணர்ந்து தன்னைப் பிணித்துள்ள கட்டுகளினின்றும்விடுபட்டு ஆன்ம ஈடேற்றம் பெறுவதே ஆன்ம நோக்காகும்-

# த ஞானியர்

# தத்துவம்!

உலகில் பிறந்த மனிதன் ஒவ்வொருவனும் வாழ்ந்தேயாக வேண்டும்- எப்படியும் வாழலாம் என்றில்லாமல் இப்படித் தான் வாழ

தத்தில் நால்வர்ணம் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன- பகவத் கீதையிலும் பகவான் கண்ணன் "நான்கு வர்ணங்களையும் நானே படைத்தேன், அவர்களுக்

## "நான்கு வர்ணங்களையும் நானே படைத்தேன்; அவர்க்குரிய கடமைகளையும் நானே வகுத்தேன்!"

**—பகவான் கிருஷ்ண பரமாத்மா**

வேண்டும் என்ற நியதிகளையும், பயிற்சிகளையும் பெற்றிருத்தல் அவசியம் என்பது கல்வியூடாக வற்புறுத்தப்பட்டது- பிறருடைய தயவை எதிர்பாராது தானே தன்னைக் காப்பாற்றும் ஆற்றலைப் பெறுதல் இன்றியமையாத கடமையாகும்- அக்கடமைகளைக் கற்றுத் தூய வாழ்வு வாழ்தலே வாழ்வின் நோக்காகும்-

மேலே குறிப்பிட்ட இருவகை நோக்கங்களையும் பின்வருமாறு வகுத்துக் கூறலாம்- மறுமைக் குரியஆத்ம ஞானம் பற்றிய அறிவை வழங்குவது "பரவித்யா" இம்மைக்குரிய உலகியல் ஞானத்தை வழங்குவது "அபரவித்யா"-

பிற்காலத்தில் கல்வியின் நோக்கம் மேலும் விரிவடைந்தது- அறம் பொருள் இன்பம் வீடு நாற்பயனே" என்னும் கருத்து வேரூன்றத் தொடங்கியது- அறவழியில் வாழ்ந்து, அறவழியில் பொருளீட்டி, அறவழியில் இன்பத்தை அனுபவித்தால் வீடுபேறு தானாகவே கிட்டும்- கல்விப் பயன் இதுவேயாகும் என்பதை இந்து மதக் கல்வி மரபு எடுத்துக் கூறுகிறது-

இந்து சமுதாயம் வர்ணாச்சிரம தர்மத்தை அடிப்படையாகக் கொண்டது- பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்னும் வர்ணப் பாகுபாடு இருக்கு வேத ஆரம்பத்தில் காணப்படவில்லை- ஆனால் புருஷ சூக்

குரிய கடமைகளையும்நானே வகுத்தேன்" என்று கூறுகின்றன- நால்வகையான சமூகப் பிரிவும் கடவுளால் விதிக்கப்பட்டதென நம்ப வைப்பதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகளே இவையாகும்-

வர்ணாச்சிரம தர்மத்திற்கமையவே இந்து மதக்கல்வி மரபு வளர்ச்சி பெற்றது- அந் நால்வகைப் பிரிவும் கொள்கையளவில் தொழில் சம்பந்தப்பட்டதாகவே அமைந்தது- அதனால் ஒவ்வொருவர்ணத்தாரும் தத்தமக்கென விதிக்கப்பட்ட தொழில்களையும் அவற்றுடன் தொடர்புடைய கல்வியையும் கற்க வேண்டியவர்களாக இருந்தனர்-

சமுதாயத்தின் முதற்படியிலே வைத்தெண்ணப்பட்டவர்கள், பிராமணர்கள்- அவர்கள் வேதங்களை ஓதுதல் ஓதுவித்தல், வேள்வி செய்தல், செய்வித்தல், ஈதல் ஏற்றல் என்னும் ஆறு தொழில்களுக்கும் உரியவர்கள்- பிரமத்தை உணர்ந்தவன் பிராமணன்- அவன் அறிவுப் பலத்தினால் அரசர்களையும், வணிகர்களையும் தன்னுடைய முதன்மையை ஏற்றுக் கொள்ளும்படி செய்தான்- வேதங்கள், பிராமணங்கள், உபநிடதங்கள் என்பனவற்றைக் கற்பித்து வந்த பெருமைக்குரியவர்களாகப் பிராமணர்கள் விளங்கினர்-

[வளரும்]

வீரகேசரி 12-01-83

பண்டைய இந்து மதக் கல்வி மரபு

# தூயவாழ்க்கை நெறியே உயர்

நாட்டைக் காத்தலும், நீதியை நிலை நாட்டுதலும், ஓதலும் வேள்வி செய்தலும் சத்திரியர்களுக்குரிய தொழில்களாயின- வைசியர்களும் வேதம் ஓதுவதற்கும், வேள்வி செய்வதற்கும் உரியவர்களாவர்- மந்தை மேய்த்தலும், பயிர்த் தொழில் செய்தலும், வாணிகஞ்செய்தலும், வட்டிக்குப் பணங்கொடுத்தலும் வைசியர்களுக்குரிய முக்கிய தொழில்களாகும்-

முதல் மூன்று வர்ணத்தார்களுக்கும் ஊழியஞ் செய்தலே சூத்திரனுக்குரிய கடமையென விதிக்கப்பட்டிருந்தது- ஓதலும் வேள்வி செய்தலும் சூத்திரனுக்குரிய கடமைகள் அல்ல- ஒவ்வொரு வர்ணத்தாரும் அவரவருக்குரிய கடமைகளினின்றும் தவறக் கூடாது- ஒருவன் பிறனுக்குரிய தொழிலைத் திறம்படச் செய்வதிலும் பார்க்கத் தனக்குரிய தொழிலைப் பிழையாகச் செய்தல் போற்றதற்குரியதாகும் என்று மனுதர்ம சாஸ்திரம் போன்ற நூல்கள் பிற்காலத்தில் வலியுறுத்தத் தொடங்கின- பகவத் கீதையிலும் இந்தப் பொருள்படும் வாக்கியங்கள் காணப்படுகின்றன-

வர்ணாச்சிரம தர்மம் இருவகை எண்ணக் கருக்களைக் கொண்டது- அவற்றுளொன்று நால்வகை வகுப்புப் பற்றியது- மற்றையது நால்வகை வாழ்க்கை நிலையைக் கூறுவது- பிரமச்சரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்னும் நால்வகை வாழ்க்கை நிலைகளுள் பிரம்மச்சரியமே மாணவர்களுக்குரியதாகும்- வேத காலத்தில் ஐந்தாவது வயதில் வித்தியாரம்பம் செய்யப்பட்டது- ஆரம்பத்தில் வீட்டிலேயே பெற்றோரால் அல்லது மூத்த சகோதரர்களால் பாடஞ் சொல்லிக் கொடுக்கப்படுகிறது- ஆரம்ப காலத்தில் ஏடும் எழுத்தாணியும் இருக்கவில்லை- எழுத்துக்களையறியாத நிலையில் வாய்மொழி மூலமே போதனை நடைபெற்றது-

எட்டு வயதானதும் பிராமணக் குழந்தைகளுக்கு உபநயனஞ் செய்யப்படுகிறது- சிறுவன் துறவியைப் போல காவியணிந்து தண்டொன்றைக் கையிலே பிடித்துநிற்க அவனுக்குப் பூணூல் அணிந்து அவனுடைய செவியில் காயத்திரி மந்திரத்தைப் புரோகிதன் உபதேசிப்பான்- பார்ப்பனர், சத்திரியர், வைசியர் ஆகிய மூவர்ணத்தாருக்கும் உபநயனம் முக்கிய சடங்காகும்- பதினொரு வயதில் சத்திரியர்களுக்கும் பன்னிரெண்டு வயதில் வைசியர்களுக்கும் உபநயனம் செய்யப்படுகிறது- முறையான கல்வி உபநயனச் சடங்குடனே ஆரம்பமாகிறது-

இன்று போல் அன்றுபாடசாலைகள் இருக்கவில்லை- ஆசிரியருடைய வீடே கல்விக் கூடமாக அமைந்தது- கற்றறிந்த ஒவ்வொரு பார்ப்பனனுடைய வீடும் பாடசாலையாக விளங்கியது- பாட போதனை பெருமர நிழல்களிலேயே நடைபெற்றது- இத்தகைய குருகுலங்கள் நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் காணப்பட்டன- இந்திய நாகரீகமும் பண்பாடும் குருகுலங்களிலேயே ஊற்றெடுக்கத் தொடங்கின-

தகுதி வாய்ந்த மாணவர்கள் குருவிடஞ் சென்று வித்தைகள் பயின்றனர்- மாணவர்கள் குருகுலத்தில் மாணவராகச் சேரும் பொழுது சமித்துக்களைக் (வேள்விக்குரிய விறகுகள்) காணிக்கையாகச் செலுத்திக், கல்வியை ஆரம்பிப்பர்- மாணவர்களுடைய குலம், கோத்திரம் முதலின விசாரிக்கப்பட்ட பின்னரே கல்வி கற்பதற்கு அனுமதி வழங்கப்படும்- அவரவர்க்குரிய பயிற்சிகளைக் கொடுப்பதற்காகவே குலம் பற்றிய விசாரணை செய்யப்பட்டது-மாணவனை ஏற்றுக் கொள்ளப்பட்டதும், ஆசிரியனுடைய வீட்டிலிருந்தே குருகுலவாசஞ் செய்து கல்வி பயின்றனர்- மாணவன் குருவின் குடும்பத்தில் ஓர் உறுப்பினனாகிக் குருவைத் தந்தையாகவும், குருமாதாவைத்தாயாகவும், சகமாணவர்களைச் சகோதரர்களாகவும் ஏற்றுக் கல்வி பயில வேண்டும்- ஆசிரியரும் மாணவரைப் பிள்ளைகளாகவே ஏற்று உணவு, உடை, உறையுள் என்பன வழங்கிப் பயிற்சி அளித்து வந்தார்-

மாணவர்கள் ஆசிரியர்கள் வீட்டில் பலவகையான பணிவிடை செய்யக் கடமைப்பட்டவர்கள்- குருவுடைய ஆநிரைகளை மேய்த்தல், விறகு கொண்டு வருதல், துணிமணி துவைத்தல் குருவுக்குப் பாதபூசை செய்தல் ஆகியனவற்றைப் பயபக்தியுடன் செய்து வந்தனர்-

பிரமச்சரிய விரதம் மாணவர்களால் கண்டிப்பாகப் பேணப் பட்டது- மனம் வாக்குக் காயங்களினால் கற்புக்கடன் பூண்டு தூயவர்களாக ஒழுகி வந்தனர்- புலனடக்கமும், ஒழுக்கப் பயிற்சியும், அடக்கமும் பணிவும் தெய்வ பக்தியும் மாணவர்களுக்குரிய இலக்கணங்களாகப் போற்றப் பட்டன-

ஆசிரிய மாணவ உறவு பண்டைய இந்தியாவில் இருந்தது போல உலகில் எந்த நாட்டிலும் இருந்ததில்லை- குருவை பிரம்மா, விஷ்ணு, மகேஸ்வரன் ஆகிய மும் மூர்த்திகளின் ஒரு வடிவமாகவே மாணவர்கள் கண்டு வணங்கினர்- வேதோப நிடதங்கள் குருவுக்குத் தெய்வ நிலை அளிக்கின்றன-

பயிற்சி முடிவுற்றதும் ஆசிரியர் மாணவர்களை அழைத்து அறவுரை வழங்குவர்- பட்டமளிப்பு விழாவின் போது இன்றைய பல்கலைக் கழகங்களில் நிகழ்த்தப்படும் பட்டமளிப்புப் பேருரை போல குருவின் உபதேசம் அமைந்தது எனலாம்- பிரமச்சரிய விரதத்தின் பின்னர் மாணவர்கள் காலடி எடுத்து வைக்கப் போகும் கிருகஸ்த தர்மத்தின் (இல்லறம்) சிறப்பியல்புகள் ஆசிரியரால் எடுத்து விளக்கப்படும்- பின்னர் மாணவர்கள் தம்மாலியன்ற குரு தட்சணையைச் செலுத்தி ஆசிரியருடைய ஆசீர்வாதத்தைப் பெற்று விடை பெறுவர்-

ஆசிரியர் கட்டண மெதுவும் மாணவரிடம் எதிர்பார்க்கவில்லை- அக் காலச் சமூகம் கல்வி வளர்ச்சியில் அக்கறை கொண்டது- அதனால் குருகுலங்களை அக்கால மக்கள் பேணிக் காத்து வந்தனர்-

இந்த மதக் கல்வி மரபில் பாடத்திட்டம் வர்ணாச்சிரம தர்மத்துக் கேற்பவே அமைந்திருந்தது- பொதுவாக மாணவர்கள் பயின்ற முதலாவது பாடம் சந்தியாவந்தனமாகும்- காலை, நண்பகல், மாலை என்னும் மூன்று காலத்தும் செய்யப்படும் வழிபாடு சந்தியாவந்தனம் எனப்படும்- இதற்கடுத்ததாக வேதப்பயிற்சி முக்கிய இடம் பெற்றது- வேதத்துடன் தொடர்புடைய பிற துறைகளையும் அவர்கள் கற்றனர்- வேதத்தை முழுமையாக விளங்கிக் கொள்வதற்கு உதவும் வேதத்தின் ஆறு உறுப்புக்களையும் (வேதாங்கம்) கற்றனர்- அவை கற்பம் (வேள்வி இயற்றும் முறை) சிட்சை (வேதத்தின் ஒலியியல்) சந்தஸ் (செய்யுளும், யாப்பும்) நிருத்தம் (சொற்களுக்குரிய விளக்கம்) வியாகரணம் (இலக்கணம்) சோதிடம் (வானவியல்) என்ற அழைத்தனர்-

பார்ப்பனர்கள் ஆசிரியர்களாகவும், புரோகிதர்களாகவும் பணிபுரிந்த காரணத்தினால் அவர்களுக்குச் சிறப்பாக வேதங்களும்உபநிடதங்களும், இதிகாசபுராணங்களும், தர்ம சாஸ்திரங்களும் கற்பிக்கப்பட்டன- இவை தவிர கணிதம், அழகியற்கலைகள் என்பனவும் போதிக்கப்பட்டன-

சத்திரியர்கள் நாட்டைப் பாதுகாக்கும் பணியை மேற்கொண்டவர்களாகையால் யுத்தக் கலை, யானை யேற்றம், குதிரையேற்றம், தேரேற்றம் என்பனவற்றுடன் அரசியல் விஞ்ஞானம் அர்த்த சாஸ்திரம், தர்மசாஸ்திரம் என்பனவற்றையும் கற்றனர்- வேதங்களுள் குறிப்பாகத் தனுர் வேதத்தைக் கற்றனர்- வைசியர்கள் வாணிகத் தொழிலைச் சிறப்பாகக் கொண்ட காரணத்தினால் ஓரளவு வேதத்தையும் விவசாயம், புவியியல், வேற்று மொழிகள், கணிதம் என்பனவற்றைக் கற்றுக் கொண்டனர்- அர்த்த சாஸ்திரம் இவர்கள் கற்க வேண்டிய முக்கிய நூலாகும்- முத்துக்களையும் நவரத்தினங்களையும் ஆராயும் அறிவும் தானியங்கள் பற்றிய அறிவும் இவர்களுக்கு இன்றியமையாதன-

## போதனமுறையின் முப்பெரும் அம்சங்கள்
## விளக்குதல், வினவுதல், உரையாடுதல்!

# குறிக்கோள்!

**காரை. செ. சுந்தரம்பிள்ளை**
(விரிவுரையாளர் பலாலி ஆசிரிய கலாசாலை)

சூத்திரர்களுக்குரிய கல்வியைப் பிராமணர்கள் வழங்கவில்லை- பிராமணக் கல்வி அமைப்புக்குள் சூத்திரர்களுடைய தொழிற் பயிற்சி அமையவில்லை- மனுதர்ம சாஸ்திரப்படி வேதத்தை ஓதும் உரிமையும் சூத்திரர்களுக்கு வழங்கப்பட வில்லை- அவர்கள் தமது சமூகப்பெரியவர்களிடமிருந்து விவசாயம், மந்தை மேய்ப்புகை வினைகள் என்பனவற்றைக் கற்றுக் கொண்டனர்- உயர் கல்வி பெறும் வாய்ப்பும் சூத்திரர்களுக்கு இருக்கவில்லை)

பெண்களுக்கும் ஆண்களுக்கும் கல்வி கற்பதில் சம சந்தர்ப்பம் வழங்கப்பட்டது- பெண்களும் பிரமச்சர்ய விரதம் பூண்டு கல்வி கற்றனர்- கற்ற பெண்களுக்குச் சமுதாயத்தில் பெரும் மதிப் பிருந்தது- ஆனல்மனுதர்ம சாஸ்திரம் எழுந்த காலத்தில் நிலைமை மாறி விட்டது- பாலிய விவாகம் நடைமுறைக்கு வந்ததும் பெண்கள் உயர் கல்வி பெறும் வாய்ப்பை இழந்து விட்டனர்- வீட்டிலிருந்த படியே பெற்றோர்களிடம் அல்லது சகோதரர்களிடம் கல்வி கற்க வேண்டிய நிலைக்குப் பெண்கள் தள்ளப்பட்டனர்-

ஏட்டுக் கல்வியுடன் மட்டும் இந்த மதக் கல்வியமைப்பு இருந்து விடவில்லை- தொழிற் கல்வியும் சிறப்பிடம் பெற்று விளங்கியது- மருத்துவக் கல்வி மாணவர்களுக்கு வழங்கப்பட்டது- ஆயுர் வேதம்மருத்துவத் துறையை விரித்துரைக்கின்றது- "தட்சசீலம், "நாளாந்தா" முதலிய பல்கலைக் கழகங்களில் மருத்துவக் கல்வி அக்காலத்தில் வழங்கப்பட்டது- இவை தவிர இசை, நடனம், நாட ச[illegible]ற்பம், சித்திரம், ஓவி[illegible]தலிய நுண்கலைகளும் [illegible]க்கப்பட்டன- இவற்[illegible]னைத் தனிப்பாடசாலை[illegible] அப்போது கிடையா- [illegible]ணவர்கள் குருவினுடைய [illegible]ட்டிலிருந்தே குருகுல வாசம் செய்து பயின்றனர்-

கல்வி மொழி பெரும் பாலும் சமஸ்கிருதமாகவே இருந்தது- வேத காலத்தில் ஆசிரியர் சொல்வதைக் கேட்டு மனனஞ் செய்து, வாய் மொழி மூலமே பயின்று வந்தனர்- கற்பித்தல் முறைகளாக விளக்குதல், உரையாடுதல், வினவுதல் ஆகியன அமைந்தன- மாணவர்கள் எதையும் விளங்கிக் கற்றல் வேண்டுமென வலியுறுத்தப்பட்டது- முதலில் பாடத்தைச் சிரவணம் (விளங்குதல்) செய்தனர்- பின்னர் மனனஞ் செய்தனர், ஆசிரியர் ஓத, அதைக் கேட்டு மாணவர்கள் மண்டூகம் (தவளை) போலத் திரும்பத் திரும்ப ஓதுவர் என வேதப் பாடல்களிலிருந்து அறிகின்றோம்-

மாணவன் கல்வியில் காலில் ஒரு பங்கை ஆசிரியரிடமிருந்தும், இரண்டாவது பங்கைத் தன் முயற்சியினூலும் மூன்றாவது பங்கைச் சகமாணவர்களிடமிருந்தும் நாலாவது பங்கைக் காலப் போக்கில் அநுபவத்தினூடாகவும் கற்றுக் கொள்கின்றான் என்பது அந்நாளைய குறிக்கோளாகும்-

பண்டைய இந்த மரபுக் கல்வியமைப்பில் யாத்திரை கற்றலா என்பனவற்றை மேற்கொள்ளலும் ஓர் அம்சமாக விளங்கியது- உலகியல் ஞானத்தையும் பரந்த அறிவையும் பெற இவை பெரிதும் துணை நின்றன-

அறிவுப் பசியைத் தணிப்பதற்காகவே பெரும் பாலும் கற்றனர்- பரீட்சையை முன் வைத்தோ அல்லது சம்பளத்தைப் பெறும் உத்தியோகத்தைமுன் வைத்தோ அறிவு புகட்டப்பட வில்லை- ஒழுக்கநெறி, சமய நெறி, ஆன்ம நெறி என்பனவற்றைப் போதிப்பதனூடாக வாழ்க்கை நெறி போதிக்கப்பட்டது- தூய வாழ்க்கை நெறியைப் பின் பற்றுவதனூடாக ஆன்ம ஈடேற்றம் பெறலாம் என்பது இந்த மதக் கல்வி மரபாகும்-

வீரகேசரி 20-02-83.

# துறைகள்!

**காரை. செ. சுந்தரம்பிள்ளை**
(விரிவுரையாளர் பலாலி ஆசிரிய கலாசாலை)

சூத்திரர்களுக்குரிய கல்வியைப் பிராமணர்கள் வழங்கவில்லை- பிராமணக் கல்வி அமைப்புக்குள் சூத்திரர்களுடைய தொழிற் பயிற்சி அமையவில்லை- மனுதர்ம சாஸ்திரப்படி வேதத்தை ஓதும் உரிமையும் சூத்திரர்களுக்கு வழங்கப்படவில்லை- அவர்கள் தமது சமூகப்பெரியவர்களிடமிருந்து விவசாயம், மந்தை மேய்ப்புகை வினைகள் என்பனவற்றைக் கற்றுக் கொண்டனர்- உயர் கல்வி பெறும் வாய்ப்பும் சூத்திரர்களுக்கு இருக்கவில்லை!

பெண்களுக்கும் ஆண்களுக்கும் கல்வி கற்பதில் சம சந்தர்ப்பம் வழங்கப்பட்டது- பெண்களும் பிரமச்சரிய விரதம் பூண்டு கல்வி கற்றனர்- கற்ற பெண்களுக்குச் சமுதாயத்தில் பெரும் மதிப்பிருந்தது- ஆனால்மனு தர்ம சாஸ்திரம் எழுந்த காலத்தில் நிலைமை மாறிவிட்டது- பாலிய விவாகம் நடைமுறைக்கு வந்ததும் பெண்கள் உயர் கல்வி பெறும் வாய்ப்பை இழந்துவிட்டனர்- வீட்டிலிருந்தபடியே பெற்றோர்களிடம் அல்லது சகோதரர்களிடம் கல்வி கற்க வேண்டிய நிலைக்குப் பெண்கள் தள்ளப்பட்டனர்-

ஏட்டுக் கல்வியுடன் மட்டும் இந்து மதக் கல்வியமைப்பு இருந்து விடவில்லை- தொழிற் கல்வியும் சிறப்பிடம் பெற்று விளங்கியது- மருத்துவக் கல்வி மாணவர்களுக்கு வழங்கப்பட்டது- ஆயுள் வேதம்மருத்துவத் துறையை விரித்துரைக்கின்றது- "தட்சசிலம்", "நாளாந்தா" முதலிய பல்கலைக் கழகங்களில் மருத்துவக் கல்வி அக்காலத்தில் வழங்கப்பட்டது- இவை தவிர இசை, நடனம், நாடகம், சிற்பம், சித்திரம், ஓவியம் முதலிய நுண்கலைகளும் போதிக்கப்பட்டன- இவற்றிற் கெனத் தனிப்பாடசாலைகள் அப்போது இல்லை- மாணவர்கள் குருவினுடைய வீட்டிலிருந்தே குருகுல வாசம் செய்து பயின்றனர்-

கல்வி மொழி பெரும்பாலும் சமஸ்கிருதமாகவே இருந்தது- வேத காலத்தில் ஆசிரியர் சொல்வதைக் கேட்டு மனனஞ் செய்து, வாய் மொழி மூலமே பயின்று வந்தனர்- கற்பித்தல் முறைகளாக விளக்குதல், உரையாடுதல், வினவுதல் ஆகியன அமைந்தன- மாணவர்கள் எதையும் விளங்கிக் கற்றல் வேண்டுமென வலியுறுத்தப்பட்டது- முதலில் பாடத்தைச் சிரவணம் (விளங்குதல்) செய்தனர்- பின்னர் மனனஞ் செய்தனர். ஆசிரியர் ஓத, அதைக் கேட்டு மாணவர்கள் மண்டூகம் (தவளை) போலத் திரும்பத் திரும்ப ஓதுவர் என வேதப் பாடல்களிலிருந்து அறிகின்றோம்-

மாணவன் கல்வியில் காலில் ஒரு பங்கை ஆசிரியரிடமிருந்தும், இரண்டாவது பங்கைத் தன் முயற்சியினாலும் மூன்றாவது பங்கைச் சகமாணவர்களிடமிருந்தும் நாலாவது பங்கைக் காலப் போக்கில் அநுபவத்தினூடாகவும் கற்றுக் கொள்கின்றான் என்பது அந்நாளைய குறிக்கோளாகும்-

பண்டைய இந்து மரபுக் கல்வியமைப்பில் யாத்திரை சுற்றுலா என்பனவற்றை மேற்கொள்ளலும் ஓர் அம்சமாக விளங்கியது- உலகியல் ஞானத்தையும் பரந்த அறிவையும் பெற இவை பெரிதும் துணை நின்றன-

அறிவுப் பசியைத் தணிப்பதற்காகவே பெரும்பாலும் கற்றனர்- பரீட்சையை முன் வைத்தோ அல்லது சம்பளத்தைப் பெறும் உத்தியோகத்தைமுன் வைத்தோ அறிவு புகட்டப்படவில்லை- ஒழுக்கநெறி, சமய நெறி, ஆன்ம நெறி என்பனவற்றைப் போதிப்பதனூடாக வாழ்க்கை நெறி போதிக்கப்பட்டது- தூய வாழ்க்கை நெறியைப் பின் பற்றுவதனூடாக ஆன்ம ஈடேற்றம் பெறலாம் என்பது இந்த மதக் கல்வி மரபாகும்-

வீரகேசரி 20-02-83

# நூல் விமர்சனம்

நூல்: சுந்தரர்பிள்ளைத்தமிழ்

ஆசிரியர்: பண்டிதர் சோ. தியாகராஜ பிள்ளை

வெளியீடு: ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை

விலை; ரூபா 6/-

கவிதைத் துறையிலே ஈழம் முன்னணியிலே நிற்கின்றது என ஒருசமயம் இரசிகமணி கனக செந்திநாதன் அவர்கள் குறிப்பிட்டார்கள். வடிவத்திலும் பொருளமைதியிலும் ஈழத்துக் கவிதைகள் சிறந்து விளங்குகின்றன என்பது அவருடைய கருத்தாகும் கடந்த கிழமை வெளியிடப்பட்ட, பண்டிதர் சோ. தியாகராஜ பிள்ளை எழுதிய சுந்தரர் பிள்ளைத்தமிழ் இதற்கோர் எடுத்துக்காட்டாகும்.

சிற்றிலக்கிய வகையிலே பிள்ளைத்தமிழ் பிரபந்தமும் ஒன்றாகும் இந்த வடிவம் பல்லவர் காலத்தில் வாழ்ந்த பெரியாழ்வாரால் அறிமுகஞ் செய்யப்பட்டதென்பதே பலரது கருத்தாகும். ஆனால் இவ்வடிவம் அதற்கு முன்னரே தோன்றிவிட்டதென்பாரு முளர்.

நம்முன்னோர்கள் இறைவனிடத்தில் அன்பைச் செலுத்தப் பல வழிகளைக்கையாண்டனர். அவற்றுள் ஒன்று இறைவனைக் குழந்தையாகப் பாவனைசெய்து வழி படுதலாகும். அந்த வழிபாட்டு நெறியில் நின்றும் முகிழ்த்ததே பிள்ளைத் தமிழ் இலக்கியமாகும்,

சுந்தரமூர்த்தி சுவாமிகளைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பத்துப் பருவங்களையும் இனிய எளிய சந்தப் பாக்களால் இன்னூலாசிரியர் பாடியுள்ளார். ஆசிரியருடைய தேவார திருவாசகங்களில் ஊறித்திளைத்த ஞானமும், நாயன்மார்களுடைய வரலாறுகளைக் கற்றுத் தேறிய உள்ளமும் திருப்பதிகள் தோறும் சென்று வணங்கிப்பெற்றஅனுபவமும் இந்நூல் முழுவதிலும் இழையேடியிருக்கக் காணலாம்.

ஆசிரியர் மிகவும் சிறந்த உவமைகளையும் உருவங்களையும் கையாள்வதில்வல்லவராகவும், சற்பனை நலனும் கவித்துவ வளமும் மிக்கவராகவும், சொற்பஞ்ச மில்லாதவராகவும் காணப்படுகிறார். எடுத்துக் காட்டாக ''கூழைப்பலவின் கனிகண்டு குதித்த மந்தியருகோடி கொண்டு பூந்தண் பொதும்பரிடைக் கோலாகலமாய் மடியிருத்தித் தாழைக் குருத்தின் எயிறிலங்கப் பிளந்து வளைந்த கூர் உகிரால் தண்டைக்குடைந்து பொற் சுளையைத் தடவி எடுத்து...'' என்னும் பாடலைக் குறிப்பிடலாம்.

முப்பது வருடங்களுக்கு முன்னரே, ஈழத்துப் பத்திரிகைகளிலும், ஆனந்தவிகடன் போன்ற இந்தியப்பத்திரிகைகளிலும் கவிதைகள் எழுதிப் புகழ்பெற்றவர் இந்நூலாசிரியர் பழைய தலைமுறையைச் சேர்ந்த இவர் எழுதிய இந்நூலில்புதுமைமணம் கமழ்கின்றது.

பண்டிதமணிஐயா அவர்கள் சுந்தரர் பிள்ளைத்தமிழ் பற்றிக் குறிப்பிடும்போது 'பாடாமல் இருக்கமாட்டாமை பிறந்து, பிறந்தது சுந்தரர் பிள்ளைத் தமிழ்' என்று குறிப்பிட்டுள்ளார். இதுவொன்றே இந்நூலின் பெருமைக்கும், ஆசிரியரின் சிறப்புக்கும் போதுமானது.

காரை. செ. சுந்தரம்பிள்ளை

ஈழநாடு 29-10-83

# இராமநாதன் நுண்கலைக் கழக இசை விழா

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் நுண்கலைப் பிரிவாகிய இராமநாதன் இசைக் கழகத்தின் இரண்டாவது ஆண்டு இசை விழா கடந்த வாரம் மூன்று நாட்கள் நடைபெற்றது. அங்கே போதனை பெறும் இறுதியாண்டு மாணவர்களும் விரிவுரையாளர்களும் இணைந்து இசை நிகழ்ச்சிகளை அளித்தனர். வெளிக் கலைஞர்கள் சிலர் பக்க வாத்தியம் வாசித்தனர்.

மாணவர்களுடைய நிகழ்ச்சி அவர்களுடைய வயதிற்கும் ஆற்றலுக்கும் பொருந்துவனவாக அமைந்தது. இசைக் கல்லூரி இவர்களுக்கு நன்கு பயிற்சி கொடுக்கிறது என அவர்கள் அளித்த நிகழ்ச்சிகளிலிருந்து தெரிகிறது.

விரிவுரையாளர்களு டை ய நிகழ்ச்சியில் முதலாம் நாள் செல்வி நந்தினி சோமசுந்தரம் வீணைக்கச்சேரி செய்தார். மிருதங்கம் வாசித்த சோமாஸ்கந்த சர்மா லய சுத்தமாக வாசிக்காத காரணத்தினால் கச்சேரி எடுபடவில்லை. இவரையடுத்து, திருமதி சிவசக்தி சிவநேசன் பாடினார். இவருடைய சாரீரம் மிகவும் கனமானது. இருந்தபோதும் நன்றாகவே பாடினார். அவர் பாடிய "யாரோ இவர் யாரோ" என்னும் பைரவி ராகக் கிருதியும் "கிராத விளையாட்டுப்பிள்ளை" என்னும் பாரதி பாடலும் பாராட்டுப் பெற்றன.

முதல் நாள் நிறைவு நிகழ்ச்சியாக திரு. ஏ. கே. கருணாகரன் பாடினார். வழமைபோல் அவருடைய கச்சேரி நன்றாக அமைந்தது. தமிழ்ப் பாடல்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தமை பாராட்டப்பட வேண்டியது. "பாரோக் கிருஷ்ணையா" பஜன் பலரின் பாராட்டுப் பெற்றது.

இரண்டாம் நாள் செல்வி மாலினி ஸ்ரீநிவாசன் வீணைக் கச்சேரி செய்தார். காபி இராகத்திலமைந்த "மீவல்ல குணதோஷ" கீர்த்தனை அழகாக வாசிக்கப்பட்டது.

செல்வி குலபூஷணி குலசேகரம் அடுத்ததாகப் பாடினார். நன்றாகப் பாடக் கூடிய குரல் வளம் படைத்தவர் இவர். இம்முறை ஏனோ தெரியவில்லை. கச்சேரி சோபிக்கவில்லை, ஆனாலும் கச்சேரி சோடை போகவில்லை.

இவருக்குப் பின்னர் திருமதி ஞானம்பிகை பத்மசிகாமணி வயலின் கச்சேரி செய்தார். எல்லா வாத்திய நிகழ்ச்சிகளையும்விட இவருடைய வாத்தியம் மிகவும் சிறப்பாக அமைந்தது.

இரண்டாம் நாள் நிறைவு நிகழ்ச்சியாக திருமதி சரஸ்வதி பாக்கியராசா பாடினார். துரதிர்ஷ்டவசமாக ஒலிபெருக்கியில் கோளாறு ஏற்பட்டு கச்சேரியில் பெரும் பங்கைப் பாழ

மூன்றும் நாள், செல்வி பாக்கியலட்சுமி நடராஜா வயலின் கச்சேரி செய்தார். மத்தியமாவதி ராகமும் அதற்குரிய கிருதியும் நிறைவாக அமைந்தன.

ஆனால், பொதுவாக இவருடைய வாசிப்பில் இடையிடையே ஸ்வரசுத்தம் போதாமை தென்படுகிறது. சுருதிப் பிடிப்பும் சற்றுக் குறைவு.

இவருக்குப் பின் திரு. ஆ. சத்தியசீலனின் வீணைக் கச்சேரி இடம்பெற்றது. இவருடைய வீணைக் கச்சேரி சுமாராகவே இருந்தபோதும், இவர் வருங்காலத்தில் ஓர் இடத்தைப் பிடிப்பாரெனத் தெரிகிறது.

இவருக்குப் பிறகு திருமதி ஜெகதாம்பிகை கிருஷ்ணானந்தசிவம் பாடினார். நன்றாகப் பாடக்கூடிய இவர் சொற்களை விழுங்குகிறார். உச்சரிப்பில் கவனம் செலுத்த வேண்டும். "முத்துக்குமரையனே" என்பதை "மூத்துக்குமரையனே" எனப் பாடினார். கச்சேரி செய்பவர்கள் சொற் தெளிவையும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

மூன்றும் நாள் நிறைவு நிகழ்ச்சியாகப் பண்ணிசை நடைபெற்றது. திருமதி தை. பரந்தாமன் பண்ணிசைத்தார். தேவார திருவாசகங்களை அழகாகப் பாடினார். சில இடங்களில் சொற் தெளிவு இல்லாமல் இருந்தபோதும் பக்திச்சுவை இருந்தது.

முழுமையாக நோக்கும்போது இசை விழா பூரணமான வெற்றி விழாவே எனக் குறிப்பிடலாம்.

– "சேயோன்"

சிந்தாமணி
07-02-82

# காரை சுந்தர
# யாழ். மேயர்

(யாழ்ப்பாணம்)

''யாழ்ப்பாண இராச்சியமாக—இராசதானியாக அன்று அறியப்பட்ட தமிழகத்தின் கடைசி மன்னனான சங்கிலி மன்னன் கதையை கவிதை நாடகமாக எழுதித்தந்தவர் கவிஞர் காரை சுந்தரம் பிள்ளை. 'ஈழநாடு' பத்திரிகையால்முதற்பரிசுவழங்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டவர். ஸ்ரீலங்கா அரசின் சாகித்தியப் பரிசும்கவிஞரின்இவ்வரலாற்று நாடகத்துக்குக் கிடைத்தது.''

மேற்கண்டவாறு யாழ். மாநகரமுதல்வர் திரு. இராஜா விசுவநாதன் யாழ்ப்பாண மாநகராட்சிமன்றத்தின் இத்